REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 20 விலை - 30 ரூபா செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் : 35 கதிர் : 334 ஐப்பசி 14 ஆம் நாள் வெள்ளிக்கிழமை 30 ஒக்ரோபர் 2020 வள்ளுவர் ஆண்டு 2051



முச்சந்தி முரளி

"அப்ப இடம்பெயர்ந்ததால ஆமியிட்ட அம்பிடாமல் தப்ப முடிஞ்சுது. ஆனால் கொரோனாவுக்கு பயந்து பரதேசம் போக முடியாதே"

## வடமராட்சி தொற்றாளர்கள் பல இடங்களிலும் நடமாடினர்

### அவர்களையும் கண்டறிந்து தனிமைப்படுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 30

கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்ட வடமராட்சியைச் சேர்ந்த இரண்டு தொற்றாளர்கள் பல இடங்களிலும் நடமாடியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் பேருந்துகளிலும் பயணம் மேற்கொண்டுள்ளனர். இதனால் அவர்களுடன் பயணித்த மற்றும் அவர்கள் சென்று வந்த இடங்களிலுள்ளவர்களைத் தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர். பொலிகண்டியைச் சேர்ந்த 18 >



## வலிகாமம் இடப்பெயர்வு இன்றுடன் 25 ஆண்டுகள்

யாழ்ப்பாணம், ஒக். 30

ஈழத் தமிழர் வாழ்வில் மறக்க முடியாத இடப்பெயர்வுகளில் முதன்மையாகிப்போன 'வலிகாமம் இடப்பெயர்வு' நிகழ்ந்து இன்றுடன் 25ஆண்டு 18 >

# யாழ்ப்பாணத்தில் 3 கிராமங்கள் முழுமையாக முடக்கம்



மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 30

யாழ்ப்பாண மாவட்டத்தில் கரவெட்டி இராஜ கிராமம், பாசையூர் மேற்கு மற்றும் திருநகர் ஆகிய கிராமங்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் முடக்கப்பட்டுள்ளன என வடக்கு மாகாண சுகா தார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார். 18 >



## கொழும்பைவிட்டு வெளியேற முண்டியடிப்பு

### வாகனங்களைத் திருப்பி விட்ட பொலிஸார்

கொழும்பு, ஒக். 30

கொரோனாவின் தாக்கத்தையடுத்து கொழும்பு மாவட்டம் உள்ளிட்ட மேல் மாகாணத் 18 >

## வீட்டிலிருந்து பணி மீண்டும் ஆரம்பம்

கொழும்பு, ஒக். 30

கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக அரச ஊழியர்கள் வீட்டிலிருந்து பணியாற்றும் முறையை மீண்டும் 18 >

## யாழில் 800பேர் தனிமைப்படுத்தலில்

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணத்தில் இறுதியாகக் கண்டறியப்பட்ட 5 தொற்றாளர்களுடனும் தொடர்புகளைப் பேணிய அடிப்படையில் 800 பேர் 18 >

## வெலிஓயா மருத்துவமனையில் மருத்துவரை அச்சுறுத்திய இராணுவ அதிகாரி

முல்லைத்தீவு, ஒக். 30

வெலிஓயா சம்பத்நுவர மாவட்ட மருத்துவமனையின் தலைமை அதிகாரியை இராணுவ அதிகாரியொருவர் அச்சுறுத்தியுள்ளார் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. அரச மருத்துவ 18 >

## யாழ். மாநகர சபை அமர்வில் பங்கேற்றார் மணிவண்ணன்

### முன்னணியினர் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு நியமிக்கப்பட்ட 18 >

## நாடாளுமன்ற அமர்வு செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளருக்கு தொற்று

18 >

## அதிவேகத்தில் 'கொரோனா' நேற்றும் தொற்று 582

மருதங்கேணியில் 6பேருக்கு

கொழும்பு, ஒக். 30

இலங்கையில் நேற்று 582 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது என அரச தகவல் 18 >

## யாழ். பல்கலையில் பி.சி.ஆர். சோதனைகள் மீள ஆரம்பமாகவுள்ளன

யாழ்ப்பாணம், ஒக். 30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் முன்னெடுக்கப்பட்டு வந்த பி.சி.ஆர். சோதனைகள் கடந்த 2 மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த நிலையில் அவை மீளவும் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான முன்னாயத்தக் கூட்டம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தில் இன்று 18 >



## பூநகரியில் தொடர்ந்தும் கடல் பெருக்கெடுப்பு

கிளிநொச்சி, ஒக். 30

கிளிநொச்சி மாவட்டத்தின் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பள்ளிக்குடா, பரமன்கிராய் கிராம அலுவலர் பிரிவுகளில் நேற்று அதிகாலை 1 மணியளவில் கடல் பெருக்கெ 18 >

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அரசை நம்பிப் பயனில்லை உங்கள் பாதுகாப்பு உங்களிடமே!

## மக்களை எச்சரிக்கின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஒக். 30

அரசின் அண்மைக்கால செயற்பாடுகளை நோக்குகையில், அவர்கள் மக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வார்கள் என்று நம்புவதில் பயனில்லை என்றே தோன்றுகிறது. எனவே மக்கள் ஒவ்வொருவருமே தத்தம் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். உரிய நடவடிக்கை எடுக்குமாறு அரசை வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு முன்னிலை சோசலிசக் கட்சியின் கல்விக்குழு செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான பலருக்கு நோய் அறிகுறிகள் தென்படாத நிலையில், ஒட்டுமொத்த சமுதாயமுமே இதனால் பாதிக்கப்பட்டுள்ளமை வெளிப்பட்டுள்ளது. இந்த வைரஸ் பரவலின் விளைவாக ஒரு சமூகம் என்ற வகையில் நாம் எத்தகைய நிலையிலிருக்கிறோம் என்பதை உணர முடிந்தது.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியதாகக்கூறி உண்பதற்கு அரிசி வாங்குவதற்குச் சென்றவர்களைக் கூட பொலிஸார் கைதுசெய்தனர். அதனை ஊடகங்களிலும் காண்பித்தார்கள். எனினும், அந்தச் சட்டத்தை வெகுவாக மீறிச்செயற்பட்ட பெருநிறுவனங்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

சாதாரண அப்பாவிப் பொதுமக்கள் மீது தனிமைப்படுத்தல் சட்டம் கடுமையாகப் பிரயோகிக்கப்படுகிறது. அவர்களது நிலைகுறித்து அரசுக்கு எவ்வித அக்கறையும் இல்லை. தற்போதைய நிலவரத்தின் விளைவாக தமது வாழ்வாதாரத்தை இழந்தவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கும் அரசு எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. எனவே மக்களின் பாதுகாப்பு மக்களின் கைகளிலேயே உள்ளது. அதற்கேற்ப சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுங்கள். என்றார்.

(கு-இ)

# துமிந்தவை விடுவிக்கக்கோரும் மனுவிலிருந்து விலகிவிட்டேன்

## எதிர்ப்புகளையடுத்து பின்வாங்கினார் மனோ எம்.பி.



கொழும்பு, ஒக். 30

"துமிந்த சில்வாவை விடுவிக்குமாறு கோரும் மனுவில் நான் இட்ட கையெழுத்தை அகற்றி, விடுதலைக்கான ஆதரவை மீளப்பெறுகின்றேன்" என்று தமிழ் முற்போக்குக் கூட்டணித் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்ற ஊடக மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

மிருசுவில் கிராமத்தில், கொலைக் குற்றம் புரிந்த இராணுவச் சிப்பாய்க்கு அரசு பொதுமன்னிப்பு வழங்கியுள்ளது. அதற்கு முன்னர் தேவையான மக்கள் ஆணையை, தேர்தல் விஞ்ஞாபனத்தில் தாம் பெற்றுக்கொண்டோம் என அரசு கூறுகிறது.

கடந்த ஆட்சியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ரோயல் பார்க் குடியிருப்பில் கொலைக்குற்றம் புரிந்து சிறையில் இருந்த நபருக்கு, பொது மன்னிப்பு அளித்து விடுதலை வழங்கினார். இந்தப் பின்னணியில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவை விடுதலை செய்யும்படி கோரி நாடாளுமன்ற உறுப்பினர்கள் 150 பேருக்கு குறையாதோரின் கையெழுத்தில், மனு தயாரிக்கப்பட்டது. அதில் நான் கையெழுத்திட்டேன்.

இதன் மூலமாக, தசாப்தகாலமாக சிறைவாசம் அனுபவிக்கும் 100 பேருக்குக் குறைவில்லா தமிழ் அரசியல் கைதிகளின் நிர்க்கதி நிலைமையை நாட்டின் கவனத்துக்கு கொண்டு வர எதிர்பார்த்தேன்.

தமிழ் அரசியல் கைதிகளுக்குக் கிடைக்க வேண்டிய நீதி, இதுவரைக்கும் நாட்டின் கவனத்துக்கே வரவில்லை. எனது நோக்கம், நாட்டின் தேசிய மட்டத்தின் கவனத்துக்கு இதைக் கொண்டுவந்து, அவர்களின் விடுதலைக்கு வழி தேடுவதாகும்.

துமிந்த சில்வா மனுவில் நான் கையெழுத்திட்ட பின்னர், இலங்கையின் முன்னணி தமிழ்க் கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் இருவரிடம், எமது தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வேண்டி மனு ஒன்றைத் தயாரித்து, ஜனாதிபதியிடம் முன்வைக்கும் யோசனையை முன்வைத்தேன். ஆனால், எனது யோசனைக்கு சாதகமான பதில் கிடைக்கவில்லை.

துமிந்த சில்வாவின் மனுவில், நான் கையெழுத்திட்டதின் பின்னுள்ள காரணத்தைப் புரிந்துக்கொள்ளாமல் ஒரு சிறு பிரிவினர் செயற்படுகின்றனர். எனது இருபத்தைந்து வருடங்கள் அரசியல் வரலாற்றில், ஒருபோதும் கட்சி தாவாமல், அரசியல் அணி மாறாமல், பணத்துக்கு விலை போகாமல், கொள்கைவழி விலகாமல், எனக்கு விடுக்கப்பட்ட உயிர் அச்சுறுத்தல்களைக் கண்டு ஓடி ஒளியாமல், மனித உரிமைகளுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றியுள்ளேன்.

இந்த நேர்மையான வரலாற்றை நினைவுக்கூர்ந்து பார்க்க இவர்களுக்கு முடியாமல் போயுள்ளது.

அதேபோல், பல தசாப்தங்களாக சிறைவாசம் அனுபவிக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்காக நான் எடுக்கும் முயற்சியை, தமிழ் கைதிகளை கொலைக்காரர்களுக்கு இணையாகப் பார்க்கிறேன் என இன்னொரு தமிழ்த் தரப்பு என் மீது குற்றம் சாட்டுகின்றது.

இவர்களுக்கு நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். இந்தக்கைதிகளை தமிழ் அரசியல் கைதிகள் என நாம் அடையாளப்படுத்தினாலும், அவர்களை, இந்த நாட்டின் தெற்கில் வாழும் பெரும்பான்மை மக்கள் இன்னமும் பயங்கரவாதிகளாகவே கணிக்கின்றனர். ஒருவரின் போராளி, அடுத்தவரின் குற்றவாளியாகத் தெரியும் உலக நடப்பை மறந்து செயற்பட முடியாமையை இவர்கள் புரிந்துக்கொள்ள வேண்டும்.

தமிழ், முஸ்லிம் மக்கள் எதிர்கொள்ளும் இதுபோன்ற துன்பங்களுக்கு தீர்வுகளைத் தேட நாம் தெற்கிலுள்ள சிங்கள மக்களுக்கு அவை பற்றிய புரிந்துணர்வை ஏற்படுத்த வேண்டும் என்பது எனது உறுதியான வழிநிலை. மேற்கண்ட காரணங்களால் துமிந்த சில்வாவின் விடுதலை மனுவில் நான் இட்ட கையெழுத்தை அகற்றுகின்றேன். என்றார்.

(கு-ம-இ)

# கொவிட் தகவல் திரட்டும் புதிய செயலி அறிமுகம்

## ஜனாதிபதியிடம் கையளித்தது சுகாதாரப் பிரிவு

கொழும்பு, ஒக். 30

மருத்துவத் துறையிலும் கொவிட் ஒழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ள அனைத்து தரப்பினருக்கும் தேவையான தகவல்களை இலகுவாக அறிந்துகொள்ளக்கூடிய புதிய செயலி (அப்ஸ்) மேல மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தினரால் உருவாக்கப்பட்டு ஜனாதிபதி கோத்தபய ராஜபக்சவிடம் அறிமுகப்படுத்தப்பட்டது.

கொவிட் நோய்த் தொற்றாளர்கள், தொடர்புடையவர்கள், தனிமைப்படுத்தல், பீ.சி.ஆர். பரிசோதனை சேவைகள், கண்காணிப்பு, தீர்மானங்களை மேற்கொள்ளுதல், நோய்த்தொற்றாளர்களுக்கு கிட்டிய பிரதேசங்களுடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளிட்ட தேவையான பல தரவுகளை இந்த புதிய செயலியின் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்தது.

ஜனாதிபதி தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் தினமும் சந்திக்கும் கொவிட் ஒழிப்பு செயலணி நேற்றுக் கூடியது.

அதன்போது மேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி தம்மிக ஜயலத் தலைமையிலான குழுவினர் புதிய செயலியை ஜனாதிபதியிடம் அறிமுகப்படுத்தினர்.

இதேவேளை, நாடு முழுவதும் உள்ள சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளின் எண்ணிக்கை 350 ஆகும். அவற்றில் 28 பிரிவுகளில் கொவிட் தொற்றாளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர். தொற்று ஏனைய பிரதேசங்களுக்குப்பரவுவதைத் தவிர்ப்பதற்கு முடியுமான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன என்று செயலணி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

பொருள்கள் பகிர்ந்தளிக்கும் வலயமைப்பின் ஊடாக வைரஸ் ஏனைய பிரதேசங்களுக்கும் பரவுவதைத் தவிர்ப்பதற்கு அனைத்துதரப்பினரதும் உதவி தேவையானதாகும். சுகாதார துறையின் வழிகாட்டல்களை முழுமையாக பின்பற்றுவது அனைவரினதும் சமூக பொறுப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

(கு)

# மருத்துவர்கள் கூறுவனவற்றையே ஊடகங்களுக்குத் தெரிவிக்கின்றேன்

## விளக்குகின்றார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஒக். 30

சமூகத்திலிருந்து கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் கொரோனா இறப்பு தொடர்பில் சரியான தகவல்கள் வெளியிடப்படுவதில்லை என்றும் வெளியாகும் செய்திகள் தொடர்பாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா விளக்கமளித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றில் நேற்றுக் காலை இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்குறித்த விடயங்கள் தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் உள்ள சிரேஷ்ட மருத்துவர்கள் குழுவே எம்முடன் உள்ளனர். மருத்துவர்கள் தெரிவிப்பதையே நான் ஊடகங்களுக்குத் தெரிவிக்கின்றேன். கொரோனாத் தொற்றுக்கு உள்ளானவர்களுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்களுக்கே கொரோனா வைரஸ் தொற்று பரவி வருகின்றது. அவர்களே தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுகின்றனர். அதனால்தான் சமூகத்தில் கொரோனா தொற்று இல்லை என்று தெரிவிக்கின்றோம்.- என்றார்.

(கு-ம-இ)

# எம்.சி.சி. உடன்படிக்கைக்கு ஒருபோதிலும் இடமில்லை!

பொம்பியோ சென்றபின்னர் அமைச்சர் விமல் சூளுரை



**கொழும்பு, ஒக். 30**
**'ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தின்கீழ் எம்.சீ.சீ. உடன்படிக்கை கைச்சாத்திடப்படமாட்டாது, அவ்வாறு கைச்சாத்திடப்படுமானால் எமது கட்சி அரசாங்கத்தில் தொடர்ந்தும் அங்கம் வகிக்காது' என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும், அமைச்சருமான விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
'கடந்த ஆட்சியின்போதே நாட்டுக்கு பெரும் அச்சுறுத்தல் இருந்தது. நாட்டைக் காட்டிக்கொடுக்கும் விதத்தில் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்டன. இதன் காரணமாகவே வெளிநாட்டு இராஜதந்திரிகளின் பயணங்களுக்கு அன்று நாம் கடும் எதிர்ப்பை வெளியிட்டோம்.
ஆனால் இன்று நாடுமீது பற்றுள்ள, அதேபோல் நாட்டின் இறையாண்மை மற்றும் சுயாதீனம் ஆகியவற்றைப் பாதுகாக்கக்கூடிய வர்களே ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிகளை வகிக்கின்றனர், நாட்டுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய எந்தவொரு திட்டங்களுக்கும் அவர்கள் அனுமதி வழங்கமாட்டார்கள்,
அமெரிக்க இராஜாங்கச் செயலர் இலங்கை வருவதற்கு முதல் நாள் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போதும் உடன்படிக்கை எதுவும் கைச்சாத்திடப்படாது என்ற உறுதிமொழியை ஜனாதிபதி வழங்கினார். இவ்வாறான தலைவர்கள் இருக்கும்போது பொம்பியோ அல்ல எவர் வந்தாலும் அச்சம் கொள்ள வேண்டிய தேவையில்லை. ஏனெனில் வருபவர்களின் நோக்கம் என்னவாக இருந்தாலும் அதனை நிறைவேற்றிக்கொள்வதற்கு இங்கு இடமளிக்கப்படாது என்பது எமக்குத் தெரியும். எம்.சி.சி உடன்படிக்கை கைச்சாத்திடப்படும், அதற்கான அழுத்தத்தை அமெரிக்கா கொடுக்கும் என எதிரணிகள் எதிர்பார்த்தன, அதனை வைத்து அரசியல் நடத்திலாம் என நினைத்தன. ஆனால், இன்று எல்லாம் புஷ்வாணமாகிவிட்டன. ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான இந்த அரசின்கீழ் எம்.சி.சி உடன்படிக்கை கைச்சாத்திடப்படமாட்டாது அவ்வாறு கைச்சாத்திடப்படும் அரசாங்கத்தில் நாம் அங்கம் வகிக்கவும் மாட்டோம்' என்றார். (ம-44)

## செயலிழந்தது பி.சி.ஆர். இயந்திரம்! முடிவுகள் வெளிவருவதில் தாமதம்

கொழும்பு, ஒக். 30
சீனாவில் இருந்து இலங்கைக்கு வழங்கப்பட்ட பிரதான பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரம் செயலிழந்துள்ளது. இதனால் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளிவருவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது என பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தினர் சுட்டிக்காட்டி யுள்ளனர்.
இயந்திரம் செயலிழந்துள்ளதை உறுதிப்படுத்திய கொரோனா ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா, அதனைச் சீர்செய்வதற்கு சீனாவில் இருந்து தொழில்நுட்ப அதிகாரியொருவர் இன்று நாட்டுக்கு வரவுள்ளார் என்ற தகவலையும் வெளியிட்டார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'பிரதான பி.சி.ஆர். பரிசோதனை இயந்திரம் செயலிழந்துவிட்டது. அதனை சீர்செய்வதற்கு எமது நாட்டிலுள்ள தொழில்நுட்பக்குழு முயற்சித்தபோதும் அது பயனளிக்கவில்லை. கடந்த நாட்களாக தொடர்ச்சியாக இயங்கியதாலேயே இயந்திரம் இவ்வாறு பழுதடைந்திருக்கலாம். இதனால் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளிவருவதில் சற்றுத் தாமதம் ஏற்பட்டுள்ளன. அது முடிவெடுப்பதிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
இந்நிலையில் சீனாவில் இருந்து ஒருவரை வரவழைப்பதற்கு இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தல் நெறிமுறைகளுக்கு அமையவே அவர் அழைத்துவரப்படுவார். பெரும்பாலும் நாளை இங்கு வருவார்' என்றார்.
(ம-44)



## நாடாளுமன்ற அமர்வு நவம்பர் 3ஆம் திகதி

கொழும்பு, ஒக். 30
நாடாளுமன்ற அமர்வுகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 3ஆம் திகதி இடம்பெறவுள்ளன என நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் அறிவித்துள்ளது.
அதற்கமைய அன்றைய தினம் காலை 10 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரையில் நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறவுள்ளன.
நாட்டின் தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு எதிர்வரும் வாரத்திற்குள் நாடாளுமன்ற அமர்வுகளை முன்னெடுத்துச் செல்வது தொடர்பாக நாடாளுமன்றக் குழுவின் விசேட கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது. சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் கட்சித் தலைவர்களுக்கு இடையில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இதன்போதே குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ம-இ)

## கொழும்பு மருத்துவமனையில் இரு திடீர் இறப்புகள்!

கொரோனாத் தொற்றா என்று அச்சம்

கொழும்பு, ஒக். 30
கொழும்பு தேசிய மருத்துவமனையில் நேற்று முன்தினம் இரவு திடீர் உயிரிழப்பு சம்பவங்கள் இரண்டு பதிவாகியுள்ளன. சிகிச்சைகளுக்காக மருத்துவமனைகளில் சேர்க்கப்படும்போதே இருவர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றால் இவர்கள் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. மரண பரிசோதனைகளின் பின்னர் பி.சி.ஆர். பரிசோதனையும் நடத்தப்படவுள்ளது. அந்த அறிக்கை வெளியான பின்னரே இவர்கள் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களா என்பதை ஊகிக்க முடியும் என சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். 'இவ்வாறான மரணங்கள் இடம்பெறும்போது பி.சி.ஆர். பரிசோதனை அண்மைக்காலமாக நடத்தப்படுகின்றது. அந்த அடிப்படையிலேயே இவர்களுக்கும் பி.சி.ஆர். சோதனை நடைபெறவுள்ளது. என அவர்கள் தெரிவித்தனர். (ம-44)

## கொத்தணித் தொடர்பின்றி காலியில் புதிய தொற்றாளர்

கொழும்பு, ஒக். 30
எவ்வித கொரோனாக் கொத்தணிகளுடனும் தொடர்பில்லாமல் புதிய தொற்றாளர் ஒருவர் காலியில் இனங்காணப்பட்டுள்ளார். காலி பாஸ் மேலுவா பகுதியிலேயே இந்தத் தொற்றாளர் அவதானிக்கப்பட்டுள்ளார்.
இந்த நபர் எவ்வாறு வைரஸால் பாதிக்கப்பட்டார் என்பதற்கான எந்த ஆதாரமும் அடையாளம் காணப்படவில்லை என்று காலி மாவட்ட தொற்றுநோயியல் நிபுணர் தெரிவித்துள்ளார்.
பாதிக்கப்பட்ட நபர் மினுவாங்கொட, பேலியகொட மற்றும் கப்பல்துறை தொற்றுகளுடன் இணைக்கப்படாதவர். இருப்பினும், இவரது சகோதரர் சேனபுரா புனர்வாழ்வு மையத்தில் தனிமைப்படுத்தப்பட்டு வீடு திரும்பினார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-இ)


# பயணத்தடை மீள்பரிசீலனை தொடர்பில் சாதகமான தீர்வு

சவேந்திர சில்வா நம்பிக்கை

கொழும்பு, ஒக். 30
அமெரிக்க இராஜாங்கச் செயலர் இலங்கையில் வைத்து விடுத்த அறிவிப்பு நடைமுறைக்குவரும் என நம்புகின்றேன் என்று இலங்கை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்றுத் தெரிவித்தார்.
இலங்கைக்கு பயணம் மேற்கொண்டிருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் நேற்று ஊடகவியலாளர் சந்திப்பிலும் பங்கேற்றார். இதன்போது இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக அமெரிக்க அரசு விதித்துள்ள பயணத் தடை தொடர்பில் மீள்பரிசீலனை செய்யப்படும் என்ற அறிவிப்பை அவர் விடுத்திருந்தார்.
இது தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே இராணுவத் தளபதி மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டார்.
'அமெரிக்கா என்பது பலம்பொருந்திய நாடு, இராஜாங்கச் செயலர் பதவியை வகிப்பவரும் பலம் பொருந்திய நபராகவே கருதப்படுவார்.
எனவே, அப்படியான ஒருவர் வழங்கிய அறிவிப்பு தொடர்பில் சாதகமான பெறுபேறு கிடைக்கும் என நேர்கோணத்தில் சிந்திப்போம். அது எவ்வாறு நடைமுறைக்குவரும் என்பது தொடர்பிலும் நல்லதாகவே யோசிப்போம்' என்றும் சவேந்திர சில்வா குறிப்பிட்டார். (ம-44)

# பெரும் கொவிட் கொத்தணியை தாங்கும் சக்தி நாட்டுக்கில்லை!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



**கொழும்பு, ஒக்.30**
**பேலியகொட கொவிட் கொத்தணியை விடப் பெரிய கொவிட் கொத்தணி ஒன்று உருவானால் அதைத் தாங்கிக்கொள்ளும் சக்தி சுகாதார அமைப்புக்கு இல்லை என்று அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்துள்ளதாவது:

அவ்வாறான ஒரு நிலைமை ஏற்பட்டால் கடுமையான அசௌகரிய நிலைமைக்கு நாடு தள்ளப்படும் தற்போதைய நிலையில் எமக்கு பதிவாகியுள்ள நோயாளர்களில் உப கொத்தணிகள் சிலவும் காணப்படுகின்றன.

மினுவாங்கொட கொத்தணியில் இது ஆரம்பமானது. அதன் பின்னர் கொழும்பு கப்பல் துறை கொத்தணி. மத்துகம அகலவத்தை பிரதேசத்தில் கொத்தணி ஒன்று உருவானது. பின்னர் குளியாப்பிட்டிய பிரதேசத்தில் கொத்தணி உருவானது. தற்போது ஹதுடுவ பிரதேசத்தில் அவதான நிலை ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பல உப கொத்தணிகள் உருவாகிய வண்ணம் உள்ளன. பேலியகொட கொத்தணி போன்று மேலுமொரு கொத்தணி உருவானால் நாடு மிகவும் மோசமான நிலைக்குத் தள்ளப்படும்- என்றார். (எ)

## தனிமைப்படுத்தலில் இருந்த பெண் சாவு!

கொழும்பு, ஒக்.30
புத்தளம் - முந்தல் பிரதேசத்தில் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். அவரது உடல் நேற்றுமுன்தினம் மாலை தகனம் செய்யப்பட்டுள்ளது.

76 வயதுடைய இந்தப் பெண், அவரது வீட்டில் ஏனைய அங்கத்தவர்களுடன் தனிமைப்படுத்தி வைக்கப்பட்டிருந்தார்.

முதலில் செய்யப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனையில் அவருக்கு தொற்று இருக்கவில்லை. எனினும் அந்த வீட்டிலிருந்த ஏனையவர்களின் பரிசோதனை முடிவுகள் இன்னமும் வெளியாகவில்லை என்று கூறப்படு கின்றது. (எ-இ)

## வாழைச்சேனையில் இரண்டு சிறார்களுக்குக் கொரோனா!

கொழும்பு, ஒக். 30
கோறளைப்பற்று மத்தி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் இரண்டு சிறுவர்களுக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் குடும்பங்கள் சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு, அவர்களுக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் மேற்கொள்ளப்பட்டன. இதிலேயே இந்த இரு சிறுவர்களும் கொரோனாத் தொற்றுக்கு உட்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. இதையடுத்து அவர்கள் இருவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலதிக சுகாதார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ம-150)

## கிண்ணியா வைத்தியசாலை பிரச்சினைகளைத் தீருங்கள்

### இம்ரான் மகரூப் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, ஒக்.30
கிண்ணியா வைத்தியசாலைகளில் நிலவும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளரிடம் அவரால் கடிதம் மூலம் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா தள வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு நேரம் குறைக்கப்பட்டுள்ளது. இதனால் நோயாளிகள் சிகிச்சை பெறுவதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இலங்கையின் வேறு எந்த வைத்தியசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படாத இந்த நேரக்குறைப்பை நிறுத்தி வழமைபோன்று வெளிநோயாளர் பிரிவு செயற்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேவேளை, மடுத்தீவு வைத்தியசாலைக்கும் நிரந்தர வைத்தியரை நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ-இ)

## போதிய எரிபொருள் கையிருப்பில்

கொழும்பு, ஒக்.30
நாட்டில் தேவையான அளவு எரிபொருள் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

நாட்டில் அனைத்துப் பாகங்களிலும் உள்ள மக்களுக்குத் எதிர் பொருள்களைப் பெற்றுக் தேவையான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)



## தனிமைப்படுத்தலில் உள்ளோருக்கு உதவி

மட்டக்களப்பு, ஒக்.30
மட்டக்களப்பில் கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில், தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்குத் தொடர்ந்தும் மனிதாபிமான உதவிகள் வழங்கப்படும் என்று மட்டக்களப்பு மாவட்டச் செயலர் கே.கருணாகரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்டுவரும் லிப்ட் தன்னார்வுத் தொண்டு நிறுவனத்தால் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான 40 உலர் உணவுப் பொதிகளைக் கையளிக்கும் நிகழ்வு மாவட்டச் செயலகத்தில் நேற்று நடைபெற்றது.

தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கும் நோக்கில் லிப்ட் அமைப்பின் பொதுச் செயலாளர் ஜானு முரளிதரனால் இந்த உலர் உணவுப் பொதிகள் மாவட்டச் செயலரிடம் கையளிக்கப்பட்டன. (எ)

## வைத்தியசாலையிலிருந்து தப்பிச்சென்ற தம்பதிகள்!

### துரத்திப்பிடித்த அதிகாரிகள் வீட்டில் தனிமைப்படுத்தினர்

கொழும்பு, ஒக்.30
கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் இரத்தினபுரி - இறக்குவான வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தம்பதியினர் நேற்றுமுன்தினம் தப்பியோடிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கஹவத்த - வெல்லந்தர பகுதியைச் சேர்ந்த பெண் கொரோனாத் தொற்றுச் சந்தேகத்தில் கடந்த 27ஆம் திகதி கஹவத்த தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். பின்னர் அவரது கணவரும் அங்கேயே சேர்க்கப்பட்டார்.

அவர்களை இறக்குவான வைத்தியசாலைக்கு மேலதிக பரிசோதனைகளுக்காக மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கிடையில் வைத்தியசாலை நிர்வாகத்துக்குத் தகவல் கூறாமல் இவ்விருவரும் தப்பிச்சென்று அட்டகலன்பன்ன பணாவல பகுதியிலுள்ள தங்களது வீட்டுக்குச் சென்றுள்ளனர்.

சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸார் இணைந்து அவர்கள் தொடர்பான தகவல்களைத் திரட்டியதுடன், அவர்களைக் கண்டுபிடித்து அவர்களுடைய வீட்டிலேயே தனிமைப்படுத்தியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## பண்டாரவளையும் முடக்கப்படக்கூடும்!

கொழும்பு, ஒக்.30
பண்டாரவளை நகரில் பொது விற்பனை நிலையத்தில் மூவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டப்பட்டுள்ள நிலையில் பண்டாரவளை மாநகரம் விரைவில் முடக்கப்படலாமென்று கூறப்படுகின்றது.

பண்டாரவளை மாநகர மரக்கறி சந்தைத் தொகுதி காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. பண்டாரவளை மாநகர முதல்வர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள் ளார். (எ-இ)

## மூடப்பட்டது மைதானம்

வவுனியா, ஒக். 30
நாட்டில் கொரோனா அச்சம் காரணமாக வவுனியா நகரசபை மைதானம் நேற்றுத் தொடக்கம் மறுஅறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது என்று நகரசபைத் தலைவர் இ.கௌதமன் தெரிவித்தார்.

நகரசபை மைதானம், அந்தப் பகுதியில் அமைந்துள்ள நகரசபையின் பூப்பந்து மைதானம் மற்றும் வலுவூட்டல் நிலையம் என்பவற்றைப் பயன்படுத்துவதற்கு மறுஅறிவித்தல் வரை தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கொரோனாப் பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் வெளிமாவட்டத்திலிருந்து இந்தப்பகுதிகளுக்கு வருகின்றமையால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (கு-18)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ஒரு தவறும் ஒட்டுமொத்தச் சரிவும்

யாழ்ப்பாணம், வடமராட்சியில் உள்ள பொலிகண்டிப் பகுதியில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளான ஒருவர், திருட்டுத்தனமாக அங்கிருந்து வெளியேறி வழக்கமாக என்னென்ன செய்வாரோ அதையெல்லாம் செய்து, எங்கெங்கு செல்வாரோ அங்கெல்லாம் சென்று தன் விஷ்டப்படி நடமாடியுள்ளார். சில நாட்களின் பின் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் அவருக்கு கொரோனாத்தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. விளைவு? அவர் போன இடத்தைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இராஜகிராமம் என்ற ஊரே முடக்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் தனிநபர் ஒருவரின் தவறு, ஒட்டுமொத்தமாக யாழ்ப்பாணத்தையே கொரோனா அபாயத்துக்குள் தள்ளிவிட்டிருக்கிறது. இன்னொரு கொத்தணிப் பரம்பலுக்கும் வழியைத் திறந்துவிட்டுள்ளது.

பலரும் தனிமைப்படுத்தலைத் தண்டனையாக நினைக்கும் வேளையில், இன்னொரு சாரார் அப்படித் தனிமைப்படுத்தப்பட்டிருப்பது அபத்தமான ஒன்று என்ற நினைப்பில் அதை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. "எங்களுக்கு எந்த நோயும் வரமுடியாது" என்ற நினைப்பில் தனிமைப்படுத்தல் விதிகளை மீறி, அவர்கள் நடமாடுவதால், அவர்களுக்கு மட்டுமல்லாது சூழ உள்ளவர்களையும் கொரோனாவின் பிடிக்குள் சிக்க வைக்கின்றனர். அதுதான் இப்போது பொலிகண்டியிலும் நடந்திருக்கிறது.

என்னதான் ஒட்டுமொத்த நாட்டையும் முடக்கி, கைகளை அடிக்கடி கழுவி, முகக்கவசத்தை நாள் முழுதும் அணிந்து பாதுகாப்போடு இருந்தாலும், பொலிகண்டியில் நடந்தது போல ஒருசிலர் விடுகின்ற சிறு தவறால், எல்லாமே பாழாகி 'மறுபடியும் முதலில் இருந்தா?' என்ற நிலைக்கே சறுக்கவேண்டியிருக்கிறது. சிலர் தனிமைப்படுத்தலை அவமானமாகக் கருதி மறைக்கவும் முயல்கின்றனர். தனிமைப்படுத்தப்பட்டவர்களை தீண்டத்தகாதவர்கள் போல நாம் நோக்குவதும் இப்படி மறைப்பதற்கு அல்லது அவமானமாகக் கருதுவதற்கு ஓர் காரணமாகலாம். எனவே தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு உளரீதியான ஆறுதலை வழங்குவதோடு, அவர்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் குறைவின்றி ஏற்படுத்திக் கொடுப்பதும் சுற்றத்தில் உள்ளவர்களின் கடமையாகும். அவ்வாறில்லாமல் அவர்களை ஏதோ தண்டனைக் கைதிகள் போல நோக்கினால், இப்படி தனிமைப்படுத்தலில் இருப்பதை மறைத்து , தம்மிஷ்டப்படி அவர்கள் நடப்பதன் மூலம் விரும்பத்தகாத மோசமான நிலைகளை உருவாக்கி விடுவார்கள்.

குறைந்தபட்சம் பொலிகண்டி நபர், தன்னைத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியிருக்கும்போதே இவ்வாறு அதையும் மீறி வந்த விடயத்தச் சொல்லியிருந்தால், ஒட்டுமொத்த ஊரே முடக்கப்படும் நிலை ஏற்பட்டிராது. ஆனால் அதனை அவர் ஒரு கௌரவக்குறைச்சலாக நினைத்து மறைத்ததன் விளைவை ஒட்டுமொத்தக் குடாநாடும் அடுத்துவரும் நாட்களில் அனுபவிக்க நேரலாம்.

# காணி அபகரிக்கும் முயற்சி மலையாளபுரத்தில் முறியடிப்பு

கிளிநொச்சி, ஒக்.30

**வயல் நிலங்களை அத்துமீறிக் கையகப்படுத்தும், நோக்கில், நில அளவைத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட காணி அளவிடும் முயற்சி நேற்று கிளிநொச்சி மலையாளபுரம் கிராமத்தில் முறியடிக்கப்பட்டுள்ளது.**

மக்களுடைய கடும் எதிர்ப்பால் நில அளவைகளை மேற்கொள்ள வந்த நில அளவைத் திணைக்களத்தினர் நான்காவது முறையாகவும் அந்த இடத்தை விட்டு வெளியேறினர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச சபைக்குட்பட்ட கேஎன் -9 கிராம அலுவலர் பிரிவின் மலையாளபுரம் கிராமத்தில் உள்ள குறித்த காணியில் மக்கள் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக காணிக்கான உறுதிப் பத்திரங்களுடன் விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். அந்தக் காணிகளை நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு வழங்கும் நோக்குடன் கடந்த சில தினங்களுக்குள் மூன்று தடவைகள் நில அளவை திணைக்களத்தால் அளவீடு செய்யமுற்பட்டபோது மக்கள் திரண்டு தடுத்திருந்தனர். விவசாயக் காணிகளைக் கையகப்படுத்துவதை நிறுத்துமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரியிருந்தனர். எனினும் நான்காவது முறையாக நேற்றும் அந்தக் காணிகளை அளக்கும் முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. மக்கள் ஒன்று திரண்டதால், அளக்கும் முயற்சி நிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்கள், கரைச்சிப் பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்டச்செயலாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளனர். (ப-ரி)

## சஜித்துக்கு அறிவித்துவிட்டே '20'க்கு வாக்களித்தேன்

டயனா கமகே எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.30

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாவிடம் அறிவித்துவிட்டே 20 ஆவது அரசமைப்புக்கு ஆதரவாக வாக்களித்தேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் டயானா கமகே தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய மக்கள் சக்தியின் உரிமை எனது கணவரிடம் உள்ளது. இதனால், என்னை அந்தக் கட்சியில் இருந்து நீக்க முடியாது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ச எனது நண்பர். எனது கணவர், பசில் ராஜபக்சவுக்கு நெருக்கமானவர் - என்றார். (ஐ-இ)

## இறக்குமதி மீன்களுக்கான வரி அதிகரிப்பு

கொழும்பு, ஒக்.30

இறக்குமதி செய்யப்பட்ட மீன், கருவாடு, மாசி, நெத்தலி மீன் ஆகிய அத்தியாவசியப் பொருள்கள் மீதான வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

சந்தையில் மீன் விற்பனைகள் குறைவடைந்துள்ள நிலையில், அவை உலர்ந்த மீன்களாக மாற்றப்படுவதால் தேசிய உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று மீன்பிடித் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒரு கிலோகிராம் கருவாடுக்கு 127 ரூபாவும், மாசி ஒரு கிலோகிராம் 302 ரூபாவும் நெத்தலி மீன் ஒரு கிலோகிராமுக்கு ஒரு ரூபாயும் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# சுண்டிக்குளத்தில் தொடர்கிறது சட்டவிரோத மணல் அகழ்வு

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஒக்.30



கிளிநொச்சி, கல்லாறு சுண்டிக்கும் பகுதியில் அனுமதியின்றி மணல் அகழ்வு தொடர்கிறது என்றும், அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என்றும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் மக்கள் மேலும் தெரிவித்ததாவது; சர்வசாதாரணமாக இந்த மணல் அகழ்வு நடைபெறுகிறது. பகலில் உழவு இயந்திரங்கள் மூலம் ஏற்றிச்செல்லப்படும் மணல் இரவில் டிப்பர் வாகனங்களில் வெளியிடங்களுக்குக் கொண்டுசெல்லப்படுகின்றது. வன ஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குட்பட்டது என அடையாளப் படுத்தப்பட்ட நிலப்பகுதியில் பத்து அடிக்கும் மேல் ஆழமாகத் தோண்டி பல ஏக்கர் சுற்றளவில் மணல் அகழப்படுகிறது. இதனால் உவர்நீர் உட்புகும் அபாயம் எழுந்துள்ளது. மணல்கடத்தல் நடைபெறும் பிரதான பாதையான கல்லாற்றுப் பாலத்தில் இராணுவக் காவலரன் இருக்கும் நிலையில் அதனூடாகப் பயணிக்காது குறுக்கு வீதிவழியாக கடத்தல்காரர்கள் மணல்களைக் கடத்துகின்றனர் நாளொன்றிற்கு இரவில் முப்பதுக்கும் மேற்பட்ட டிப்பர்களில் மணல் ஏற்றிச் செல்லப்படுகின்றன. எனவே இது தொடர்பில் அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர். (ப-ரி)

இட வசதி போதாது:

# வீதியில் இறங்கினர் சந்தை வியாபாரிகள்

**மருதனார்மடம், ஒக்.30**

**வலி.தெற்கு பிரதேச சபையின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மருதனார்மடம் பொதுச்சந்தை வியாபாரிகள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை சந்தைக்கு முன்பாக நேற்று முன்னெடுத்தனர்.**

மருதனார்மடம் பொதுச் சந்தையில் புதிதாக அமைக்கப்பட்டுவரும் சந்தைக் கட்டடத் தொகுதியில் வியாபாரிகளுக்கான இட ஒதுக்கீடு சம்பந்தமாகவே இந்தக் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

பிரதேச சபையால் வழங்கப்பட இருக்கும் இடத்தின் அளவீடு தமது வியாபார நடவடிக்கையை முன்னெடுப்பதற்கு போதுமானதாக இல்லை என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் "மக்கள் பிரதிநிதிகளான உங்களுக்கு எங்களை மக்களாக தெரியவில்லையா?" "எமக்கு உரிய இடத்தை பழையது போல் நிறைவாகத் தாருங்கள்" ,"உங்களுடைய முதலாலித்துவ அதிகாரத்தை ஏழைப் பாட்டாளிகள் மீது திணிக்காதே.","வேண்டும் வேண்டும் நியாயம் வேண்டும்" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியிருந்தனர்.



அத்துடன் தமக்கு நியாயம் பெற்றுத் தர வேண்டுமெனக் கோரி, ஜனாதிபதி மற்றும் பிரதமரின் புகைப்படம் அடங்கிய பதாதைகளையும் போராட்டத்தில் ஈடுபட்ட வியாபாரிகள் கையில் ஏந்தியிருந்தனர்.

குறித்த பிரச்சினை தொடர்பாக கடந்த 22 ஆம் திகதி பிரதேச சபைக்கு முன்பாகவும் வியாபாரிகள் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-20)



## நீண்டகாலத்தின் பின்னர் இந்துமயான வீதி சீரமைப்பு

மறவன்புலவு, ஒக்.30

மறவன்புலவு அறுகம்புல் வெளி இந்துமயான வீதி நீண்டகாலத்தின் பின்னர் சீரமைக்கப்பட்டு வருகிறது.

வீதி சேதமடைந்து காணப்பட்டதால் பொது மக்கள் உப்புத்தரவையின் ஒற்றையடி பாதையூடாகவே இந்து மயானத்துக்கு சென்று வந்தனர்.

மழைகாலங்களில் வெள்ள நீரில் மூழ்கியிருக்கும் இந்தப் பாதையூடாக பயணிப்பதில் பெரும் சிரமத்தை எதிர்க்கொண்டிருந்தனர்.

இந்த நிலையில் மூன்று மில்லியன் ரூபா செலவில் பிரதான வீதியிலிருந்து அறுகம்புல் வெளி இந்துமயானம் வரையான சுமார் ஒரு கிலோ மீற்றர் வீதியின் சீரமைப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. (ஐ-ரி1)

வெளிமாவட்ட

## கடலுணவுகளுக்கு மாநகரத்தில் தடை

யாழ்ப்பாண மாநகர பிரதேசத்தில் உள்ள மீன் சந்தைகளில் வெளிமாவட்டங்களில் இருந்து கடலுணவுகளை எடுத்து வந்து விற்பனை செய்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கண்காணிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதேவேளை மாநகர பிரதேசத்தில் உள்ள சந்தை வியாபாரிகளின் விவரங்களையும் சுகாதார பிரிவினர் திரட்டி வருகின்றனர். அத்துடன் சந்தை வியாபாரிகளுக்கு அடுத்து வரும் நாள்களில் கட்டம் கட்டமாக பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளதுஎனதெரி விக்கப்பட்டது. (ஐ-17)


## திருநெல்வேலி வியாபாரிகளுக்கு பி.சி.ஆர்.சோதனை?

நல்லூர் ஒக்.30

திருநெல்வேலிச் சந்தையில், உள்ள வியாபாரிகளுக்கு எழுந்தமான பி.சி. ஆர். பரிசோதனை செய்யவதற்கு நடவடிக்கை எடுக்க முயற்சிப்பேன் என்று நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் மதுசுதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது;

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று யாழிலும் அகலக் கால் ஊன்றும் ஏதுவான நிலையின் அபாய சமிஞ்ஞைகள் தென்படுகின்றன. தெற்கில் மீன் சந்தையொன்றினூடாக அதிக தொற்றுப்பரவல் நிகழ்ந்து வருகிறது. யாழ்ப்பாணத்தின் மிக முக்கிய பகுதியாகவும் மக்கள், வர்தகர்கள் பயன்பாடு அதிகமாகவும் அதிக சன நடமாட்டத்தை கொண்ட நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட திருநெல்வேலி பொதுச் சந்தையில் எம் மக்களினதும் எமது வியாபாரிகளினதும் நன்மை கருதி வியாபாரிகளுக்கு எழுந்தமான பி.சி. ஆர்.பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கையை நல்லூர் பொதுச் சுகாதர பணிமனையூடாக மேற்கொள்ள நல்லூர் பிரதேச சபை உறுப்பினர் என்ற வகையில் பரிந்துரைகளை மேற்கொள்ளவும், நடவடிக்கை எடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்வேன் - என்றுள்ளது. (ஐ)



## தெற்கு அதிவேக வீதியில் போக்குவரத்து வரையறை

கொழும்பு, ஒக்.30

தெற்கு அதிவேக வீதியில் நேற்றுத் தொடக்கம் பஸ் போக்குவரத்தை வரையறுப்பதற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

கடவத்தை நுழைவாயிலின் ஊடாக அதிவேக வீதியில் பஸ்கள் உள்நுழைவது தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது என தெற்கு அதிவேக வீதியின் பணிப்பாளர் நாயகம் கெப்டன் நிலான் மிராண்டா தெரிவித்தார்

கொட்டாவை மற்றும் கடுவலை நுழைவாயிலினூடாக வழமை போல அதிவேக வீதியில் பஸ் போக்குவரத்து முன்னெடுக்கப்படுகின்றது என அவர் தெரிவித்தார். (ஐ-இ)

## சுகாதார நடைமுறையின்றி கரைச்சியில் சில சந்தைகள்?

வியாபாரிகள் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஒக்.30

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேசசபைக்கு உட்பட்ட சில சந்தைகள் சுகாதார நடைமுறைகளைக் கைவிட்ட நிலையில் இயங்கிவருகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



அந்தச் சுகாதார நடைமுறைகளை உடன் சீர்செய்து தரும்படி சந்தை வியாபாரிகள் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் வியாபாரிகள் தெரிவித்ததாவது;

நாட்டில் கொரோனாத் தொற்று அதிகரித்து வரும் நிலையில் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் வட்டக்கச்சி சந்தை மற்றும் தருமபுரம் சந்தை, முல்லைத்தீவு மாவட்டத்தின் கீழ் இயங்கும் விசுவமடுச் சந்தை போன்றன சுகாதார நடைமுறைக்கு அமைவாக இயங்கவில்லை. இது தொடர்பாக பிரதேச சபைத் தவிசாளர், சுகாதாரப் பரிசோதகர்களிடம் பல முறை தெரிவித்தும் பலனில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. அந்தச் சந்தைகளில் உடனடியாக சுகாதார நடைமுறைகளை முன்னெடுக்க, அதற்கான வசதிகளை ஏற்படுத்த பிரதே சபை முன்வர வேண்டும் என்று வியாபாரிகள் கோரியுள்ளனர். (ஐ-113)

## தாக்குதலில் மூவர் காயம்

சாவகச்சேரி,ஒக்.30

தாக்குதலுக்கு உள்ளான நிலையில் பெண் உள்ளிட்ட மூவர் சாவகச்சேரி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

தாக்குதலில் வரணியைச் சேர்ந்த 20 வயதுடைய ஒருவர், மந்துவில் வடக்கைச் சேர்ந்த 40 வயது குடும்பத் தலைவர் மற்றும் தாவளை இயற்றாலையைச் சேர்ந்த 48 வயது குடும்பப் பெண் ஆகியோர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-9)

# தனிமைப்படுத்தப்பட்டவர்கள் சுழற்சிமுறை கண்காணிப்பில்

கொழும்பு, ஒக்.30

புதிய சுய தனிமைப்படுத்தல் கண்காணிப்பு செயல்முறை கொரோனாத் தொற்றைத் தடுப்பதற்கான தேசிய செயலணியால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்றுக்குள்ளான நபரின் முதல் தொடர்பாளர்களை அவர்களின் சொந்த வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் வைத்துக் கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தொற்றாளருடன் முதல் தொடர்பு வைத்திருக்கும் நபர் அடையாளம் காணப்பட்டால், அவர் வீட்டிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார். அவர்களின் தனிமைப்படுத்தல் உரிய வாறு கண்காணிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சுயதனிமைப்படுத்தப்பட்டவர்களை அவர்களது வீடுகளுக்குச் சென்று கண்காணிப்பில் ஈடுபடும் துறையினரின் நேர அட்டவணையும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலை 6 மணி முதல் முற்பகல் 11 மணி வரை சம்பந்தப்பட்ட பகுதியின் பொது சுகாதாரப் பரிசோதகர் கண்காணிப்பில் ஈடுபடுவார்.

முற்பகல் 11 மணி முதல் மாலை 4 மணி வரை அந்தப் பகுதிக்குரிய பொலிஸ் நிலையப் பொலிஸ் அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடுவர்.

மாலை 4 மணி முதல் மறுநாள் காலை 6 மணிவரை உறவினரின் இல்லத்தின் எல்லைக்குள் உள்ள முப்படையினரின் முகாமின் அதிகாரிகள் கண்காணிப்பில் ஈடுபடுவர்.

இந்த சுய தனிமைப்படுத்தப்பட்ட செயல்முறையை யாரேனும் மீறினால், அந்தப் பகுதியின் சுகாதார மருத்துவ அதிகாரியின் அறிவுறுத்தலின் பேரில் அவர்களைத் தனிமைப்படுத்தப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## கிளி. ம.மகா வித்தியிலிருந்து 45 பேர் பல்கலைக்குத் தெரிவு

கிளிநொச்சி, ஒக்.30

வெளியாகியுள்ள வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில், கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) இம்முறை பல்கலைக்கழகத்துக்கு 45இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தெரிவாகியுள்ளனர்.

கணிதப் பிரிவில் 12 பேரும், உயிரியல்பிரிவில் 9 பேரும், கணக்கியல் பிரிவில் 6பேரும், தொழில்நுட்பப்பிரிவில் 8பேரும், கலைப்பிரிவில் 9பேரும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகியுள்ளனர். (ப-ரி)

## மனைவி, பிள்ளைகளை தாக்கியவருக்கு மறியல்

சாவகச்சேரி, ஒக்.30

மதுபோதையில் மனைவி மற்றும் பிள்ளைகளை மோசமாகத் தாக்கிய குற்றச்சாட்டில் கைதான குடும்பத் தலைவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

தாவளை-இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த நபர் நேற்று முன்தினம் இரவு வீட்டிலிருந்த மனைவி மற்றும் பிள்ளைகளை மோசமாகத் தாக்கியுள் ளார். தாக்குதலுக்கு இலக்கானவர்கள் அங்கிருந்து தப்பி வந்து கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தனர்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபர் சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று முற்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிவான் சந்தேகநபரை நவம்பர் மாதம் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஐ-9)

## தனிமையில் உள்ளோருக்கு உலர் உணவுப் பொருள்கள்

கொழும்பு, ஒக்.30


மேல் மாகாணத்தில் தற்போது வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப்பொருள்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இரண்டு வாரங்களுக்கு தேவையான உலர் உணவுப்பொருள்கள் அடங்கிய பொதிகள் வழங்கப்படவுள்ளன என்று மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக்க தெரிவித்துள்ளார்.

இதற்கு தேவையான நடவடிக்கைகள் மாவட்டச் செயலாளர்களினூடாக முன்னெடுக்கப்படுகின்றன என (ஐ-இ)

## எரிபொருள் நிரப்பு நிலையம் ஊரடங்கின்போதும் திறக்கும்

கொழும்பு, ஒக்.30



தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்தாலும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் வழமைபோல திறக்கப்பட்டு இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு பொலிஸ் பிரிவில் குறைந்த பட்சம் மூன்று எரிபொருள் நிரப்பு நிலையங்களையாவது திறந்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜசிங்க தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கொழும்பு நகரில் அதிகமான எரிபொருள் நிலையங்களைத் திறப்பது குறித்தும் தீர்மானிக்கப்படவுள்ளது.

அத்துடன் எந்தவித இடையூறும் இன்றி வழமைபோல எரிபொருளை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-இ)

## ரிஷாத் எம்.பியை விடுவிக்க வேண்டும்

### *நிந்தாவூர் சபைத் தவிசாளர் கோரிக்கை*

அம்பாறை, ஒக்.30



கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் விடுதலை செய்யப்பட வேண்டும். ஜனாதிபதி, பிரதமர் அவரது விடுதலைக்கு ஆவன செய்ய வேண்டும். இவ்வாறு நிந்தவூர் பிரதேச சபைத் தவிசாளர் எம்.ஏ.எம். தாஹிர் கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் பெரும் நிதிக் கொள்கைகள், மோசடிகள், ஊழல்கள், ஜனநாயக விரோத செயல்கள், கொலைகள் இடம்பெற்றிருந்தும் அவற்றுக்கெதிரான நடவடிக்கைகள் எந்த நிலையிலுள்ளது என்பதும் மக்களுக்குப் புரியாமலில்லை. அந்த வகையில் துமிந்தசில்வாவையே விடுதலை செய்யுமாறு 160 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒப்பமிட்டு கோரியுள்ளனர். இது எந்த வகையிலான நீதி, தர்மமாகக் கொள்ளலாம்.

எனவே, முஸ்லிம் சமூகத்தின் குரலாக, இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களின் வாழ்வு மறுமலர்ச்சிக்காகப் பாடுபட்டு வந்த முன்னாள் அமைச்சர் ரிஷாத்தின் விடுதலைக்கு அரசு ஆவன செய்ய வேண்டும் - என்றார். (ஐ-30)

## தாய்க்கும் பிள்ளைக்கும் கொரோனாத் தொற்று

கொழும்பு, ஒக். 30

அம்பாந்தோட்டை தங்காலை, குடாவெல்ல பகுதியில் 25 வயதான பெண் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

இவரது 21 நாள்களான குழந்தையும் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார். இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

குறித்த பெண் கண்டியில் இருந்து கிரிபத்கொட பகுதிக்கு வந்து பேலியகொட மீன் விற்பனை நிலையத்தில் தொழில் புரியும் தமது உறவினருடன் ஒரு வாரம் தங்கியிருந்து பின்னர் குடாவெல பகுதியில் உள்ள தனது வீட்டுக்குத் திரும்பி சென்றுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-இ)

## மரக்கன்று நடுகை

யாழ்ப்பாணம்,ஒக்.30

"வாழ்வு வளம்பெற மரம் நட கரம் சேர்ப்போம்" என்னும் கருப்பொருளில் இமை குழுமம் அமைப்பினரால் மரக்கன்றுகள் நடும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு குப்பிளான் சனசமூக நிலையத்தில் ஆரம்பமாகி தொடர்ந்து மல்லாகத்திலிருந்து காங்கேசன்துறை வரையான கே:கே:எஸ் வீதியில் மரக்கன்றுகள் நடுகை செய்யப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-39)

## ஹெரோய்னுடன் ஒருவர் கைது

சாவகச்சேரி,ஒக்.30

ஹெரோய்ன் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொடிகாமம் நகரப்பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் இவர் கைதுசெய்யப்பட்டார்.

பொலிஸார் வழமைபோன்று நகரப்பகுதியில் சோதனையை மேற்கொண்டபோது சந்தேகத்துக்கு இடமான முறையில் ஒருவர் நடமாடியுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது அவரிடமிருந்து 40 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபரை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தியபோது ஒரு லட்சம் ரூபா பெறுமதியான பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். (ஐ-9.159)

## மரத்திலிருந்து தவறி வீழ்ந்து குடும்பத் தலைவர் காயம்

கொடிகாமம்,ஒக்.30

தென்னை மரத்தில் இருந்து தவறி வீழ்ந்ததில் குடும்பத் தலைவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் மந்துவில் பகுதியில் இடம்பெற்றது.

மந்துவில் கிழக்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 53 வயதுடைய குடும்பத் தலைவரே இரண்டு கைகளும் உடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-159)

# அதிக விலைக்கு தேங்காய் விற்பனை

## நுகர்வோர் விசனம்



யாழ்ப்பாணம், ஒக்.30
அரசாங்கத்தின் கட்டுப் பாட்டு விலையையும்மீறி தேங்காய் அதிகரித்த விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
யாழ்ப்பாணக் குடாநாட்டில் சாதாரண ஒரு தேங் காய் 80 ரூபாவுக்கு மேல் அதிகரித்த விலைக்கு விற்கப்படுகின்றது. 80 ரூபா தொடக்கம் 120 ரூபா வரைக்கும் எதுவித கட்டுப்பாடுகளும் இன்றி தேங்காய் விற்பனை செய்யப்படுவதால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் அந்தப் பணத்தைக் கொடுத்து தேங்காயை வாங்க முடி யாது பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் தேங்கா யின் தரங்களுக்கு ஏற்ப அதற்கான கட்டுப்பாட்டு விலையை அறிவித்தது. அரசாங்கம் நிர்ணயித்த விலைகைளை மீறியே தேங்காய்கள் அதிகரித்த விலையில் தாராளமாக விக்கப்பட்டு வருகின்றன. குடாநாட்டின் திருநெல்வேலி, சாவகச்சேரி, மரு தனார்மடம், கொடிகாமம் உட்பட அனேகமான சந்தைகளில் தேங்காய் தாராளமாக வந்து சேர்ந் தாலும் அவற்றின் விலைகள் தினமும் அதிகரித் துச் செல்கின்றன என்று நுகர்வோர் விசனம் தெரிவித்தனர். (ப-17)

# சங்கு மற்றும் அட்டை பிடிக்க விதித்த தடையை நீக்குங்கள்

## நறுவிலிக்குளம் மீனவர்கள் நேற்று கவனவீர்ப்பு பேரணி

மனனார், ஒக்.30
**சங்கு மற்றும் அட்டை பிடிக்கும் தொழி லுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக் கக் கோரியும், மாதக்கணக்கில் தொழில் இல்லாமல் சிரமங்களை எதிர்நோக்கு வதால் அவசர வாழ்வாதாரத்தை தரக் கோரியும் மன்னார் நறுவிலிக்குளம் மீன வர்கள் கவனவீர்ப்புப் பேரணி ஒன்றை நேற்று மேற்கொண்டனர்.**





இது தொடர்பாக மீனவர்கள் தெரி வித்ததாவது;
நறுவிலிக்குளம் கிராமத்தில் கடற்றொழிலை வாழ்வாதாரமா கக் கொண்டு 250க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்கின்றோம். நீண்ட காலமாக அட்டை, சங்கு பிடித்து எமது வாழ்வாதாரத்தை நடத்தினோம். கடந்த சில மாதங் களுக்கு முன் இந்தத் தொழில் செய்வதற்கு அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்டுள்ளது. இத னால் எமது மீனவக் குடும்பங்கள் அன்றாட வாழ்வாதாரத்திற்குப் பெரும் கஸ்ரங்களை எதிர்நோக் கியுள்ளன. எனவே கடற்றொழில் அமைச்சர் எமது மாவட்ட மக்கள் பிரதிநிதிகள் எமது வாழ்வாதா ரத்தை மீட்டுத்தரவேண்டும் அதன டிப்படையில் அட்டை, சங்கு பிடித் தல் தொழி லுக்கு அரசி னால் விடுக்கப் பட்ட தடையை உரியவர்களு டன் பேசி நீக்கு வதோடு, மாதக் கணக்கில் தொழில் செய்யாமல் பாதிக்கப்பட்ட எமது குடும்பங்களுக்கு அவசர வாழ்வாதார உதவிகளைச்செய்ய முன்வரவேண்டும். கடல் வழியால் சில விஷமிகள் செய்யும் தவறான நடவடிக்கைகளுக்கும் தமது மீன வர்களுக்கும் எதுவித தொடர்பும் இல்லை. கடற்றொழிலைக் கூட அரசின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செய்து வருகிறோம். எமது வாழ்வா தாரத்துக்காக வங்கிகளில் பெற்ற கடன்களைக் கட்ட முடியாமல் உள்ளோம். எமது வாழ்வாதா ரம் மேலும் முன்னேற்றமடைய வேண்டுமாக இருந்தால் கடலில் தடையில்லாத மீன்பிடிக்கு அனு மதியளிக்க வேண்டும் என்றனர்.
நறுவிலிக்குளம் மீனவர்களின் பேரணிக்கு ஆதரவு தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் செல் வம் அடைக்கலநாதன் அந்தப் பேரணியில் கலந்து கொண்டிருந் தார். மீனவர்களின் கோரிக்கைக் கடிதம் அவரிடம் கையளிக்கப்பட் டது. (ப-213)

# நாடாளுமன்றப் பேரவையில் ஓர் உறுப்பினராக டக்ளஸ்

கொழும்பு, ஒக். 30
நாடாளுமன்றப் பேர வையின் உறுப்பினராக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.
பிரதமர் அலுவலகம் இது பற்றிய அறிவிப்பை நேற்று விடுத்தது என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஊட கப் பிரிவு தெரிவித்தது.
புதிதாக நிறைவேற்றப் பட்ட அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட் டத்தின் அடிப்படையில் 5 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன் றப் பேரவை உருவாக் கப்பட்டுள்ளது.
சுயாதீன ஆணைக் குழுக்களின் உறுப்பினர் கள் மற்றும் பொலிஸ்மா அதிபர், பிரதம நீதியரசர் போன்ற உயர் பதவி களை நியமிப்பதற்கு குறித்த நாடாளுமன் றப் பேரவை ஜனாதி பதிக்கு ஆலோசனை வழங்கும். சபாநாய கர், பிரதமர், எதிர்க் கட் சித் தலைவர் மற்றும் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்க லாக ஐவர் குறித்த நாடா ளுமன்ற பேரவையில் அங்கம் வகிப்பார்கள்.
அதனடிப்படையில் பிர தமர் மஹிந்த ராஜபக்ச அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நிய மித்துள்ளார்.
19 ஆம் திருத்தச் சட்டத் தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பத்து உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்பு பேரவைக்கு பதிலாக தற்போது நாடாளுமன் றப் பேரவை உருவாக் கப்பட்டுள்ளமை குறிப்பி டத்தக்கது. (த)

# யாழ். மாநகரில் திண்மக் கழிவகற்றல்

யாழ்ப்பாணம், ஒக்.30
யாழ்.மாநகர பிரதேசத்தில் நுளம்பு பெருக்கத்துக்கு ஏதுவான திண்மக் கழிவுகளை அகற்றும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரு கின்றன.
யாழ்.நகரில் ஜே/81 கிராம அலுவர் பிரிவில் நேற்று நுளம்புப் பெருக்கத் துக்கு ஏதுவான திண்மக்கழிவுகள் அகற்றப்பட்டன. சிரட்டைகள், கோம் பைகள், வெற்றுப் பேணிகள் உட்பட பிளாஸ்ரிக் பொருள்கள் இவ்வாறு அகற்றப்பட்டன. மக்களால் சேகரிக் கப்பட்டு தரம்பிரிக்கப்பட்ட திண்மக் கழிவுப் பொருள்கள் அனைத்தும் இவ்வாறு அகற்றப்பட்டன என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார்.
இவ்வாறான திண்மக்கழிவகற்றும் நடவடிக்கைகள் இன்று வெள்ளிக்கி ழமை கொழும்புத்துறையில் ஜே/61 கிராம அலுவலர் பிரிவிலும் நாளை சனிக்கிழமை வண்ணார் பண்ணை ஜே/100 கிராம அலுவலர் பிரிவிலும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட் டுள்ளது. (ப-17)

# 4 கிலோ கஞ்சா இராணுவத்தால் மீட்பு!

வவுனியா, ஒக்.30
வவுனியா பம்பைமடு காட்டுப்பகுதியில் 4 கிலோ 25கிராம் கஞ்சா நேற்று மீட்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
வவுனியா பம்பைமடு இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசியத் தக வலையடுத்து மேற் கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின்போதே இந்தக் கஞ்சா மீட்கப் பட்டுள்ளது. பம்பைம டுக் காட்டினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலை யில் கஞ்சாவை இரா ணுவத்தினர் மீட்டுள்ள னர். இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கையை அறிந்த சந்தேக நபர்கள், கஞ்சாவை மறைத்து விட்டு, சம்பவ இடத்திலி ருந்து தப்பிச் சென்றுள்ள னர். அவர்களைக் கைது செய்யும் நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட்டுள் ளன என்று தெரிவிக்கப்ப டுகிறது. (ப-ரி3)

# கலாசார நிதிய ஒப்பந்தங்களை அரச துறையிடம் வழங்கவும்

## *பிரதமர் அறிவுறுத்து*

கொழும்பு, ஒக். 30
மத்திய கலாசார நிதியத் தின் கீழ் காணப்படும் நிறுவன கட்டுமானங் களை நேரடி ஒப்பந்த அடிப்படையில் அரச கட்டுமான நிறுவனங்க ளுக்கு பெற்றுக் கொடுக் குமாறு பிரதமர் அறிவு றுத்தினார்.
மத்திய கலாசார நிதியத் தின் சபை அமர்வு அலரி மாளிகையில் நேற்று நடைபெற்றது. அதில் மேற்கண்டவாறு தெரி வித்தார்.
இதேவே.ளை, 2021ஆம் ஆண்டுக்கான மத்திய கலாசார நிதியத்தின் அபி விருத்தித் திட்டத்துக்கென 3ஆயிரத்து 400 மில்லி யன் ரூபா ஒதுக்கீடு செய் வதென்று தீர்மானிக்கப் பட்டது என்றும் பிரதமர் அலுவலகம் தெரிவித் தது. (த)

# தென்மராட்சியில் 9 பேருக்கு பி.சி.ஆர்.


சாவகச்சேரி, ஒக். 30
தென்மராட்சி பிரதேசத்தில் வீடுக ளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 9 பேருக்கான பி.சி.ஆர். பரிசோதனை நேற்றுச் காலை சாவகச்சேரி சுகாதா ரத் திணைக்களப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் நடத்தப்பட்டது.
மினுவாங்கொட பிரண்டிஸ் ஆடைத் தொழிற்சாலையில், பணியாற்றி அண்மையில் பேருந்தில் வந்திருந்த மிருசுவில் தெற்கு, கொடிகாமம், எருவன், கைதடி, நாவற்குழி, ஆகிய இடங்களைச் சேர்ந்த நான்கு பெண் கள், கைதடி நுணாவிலைச் சேர்ந்த பேருந்தின் சாரதி , முகத்துவாரம் காளி கோவில் கட்டுமானப் பணியில் ஈடுபட்ட



கெற்பேலியைச் சேர்ந்த மூவர் ஆகிய ஒன்பது பேருக்கே இவ்வாறு பி.சி. ஆர். பரிசோதனைகள் மேற்கொள் ளப்பட்டு மாதிரிகள் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. குறித்த நபர்கள், கட்டாய தனிமைப்படுத்தல், மற்றும். சுய தனிமைப்படுத்தல்களில் இருந்து வருகின்றனர். (ப-9)

# கொரோனா தொற்றுப் பாதிப்பில் 112 ஆவது இடத்தில் இலங்கை

**கொழும்பு, ஒக்.30**
**கொரோனாத் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் இலங்கை 112ஆவது இடத்திலுள்ளது.**



இலங்கையில் மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொரோனா கொத்தணி காரணமாக பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கிறது. மினுவாங்கொட மற்றும் பேலியகொட கொரோனாக் கொத்தணியில் மட்டும் இதுவரை பதிவாகியுள்ள மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 731 ஆக அதிகரித்துள்ளது. இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 9 ஆயிரத்து 205ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவால் நாட்டில் 19 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் கடந்த காலங்களைவிடத் தற்யிபோது கொரோனா தொற்று நாட்டில் தீவிரம்பெற்றுள்ளது. கொரோனாப் பரவல் ஆரம்பமாகிய காலப்பகுதியில் கடந்த ஜூன் மாதமளவில் இலங்கை 100ஆவது இடத்தில் உள்ளது. (வ-இ)



# மட்டக்களப்பில் கொரோனா விழிப்புணர்வு

மட்டக்களப்பு, ஒக்.30
மட்டக்களப்பு பேருந்து நிலையத்தில் கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கான விழிப்பூட்டல் செயற்பாடு நேற்று முன்னெடுக்கப்பட்டது.
தேசிய இளைஞர் சேவைகள் ·மன்றம், பொதுச் சுகாதாரத் திணைக்களம் என்பன பொலிஸாருடன் இணைந்து இச் செயற்பாட்டை முன்னெடுத்தனர். இதன்போது பொதுப்போக்குவரத்து வாகனங்களில் கொரோனாத் தடுப்பு விழிப்புணர்வு ஸ்ரிகர்களும் ஒட்டப்பட்டன. (வ-இ)

# ஊடரங்கு நிலவும் இடங்களில் வர்த்தக நிலையங்கள் திறப்பு

கம்பஹா, ஒக்.30



தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பகுதிகளில் விற்பனை நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் நேற்றுத் தொடக்கம் திறக்கப்ட்டுள்ளன.
இதன்படி, காலை 8 மணி தொடக்கம் இரவு 10 மணி வரை 14 மணித்தியாலங்கள் விற்பனை நிலையங்கள் மற்றும் மருந்தகங்கள் திறந்திருக்கும் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.
பொருள்கள் கொள்வனவு மற்றும் விற்பனையின்போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி முகக்கவசங்களை அணிந்து செயற்படுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார்.
கம்பஹா முழுவதிலும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதுடன் கொழும்பு மாவட்டத்தில் 21 பொலிஸ் பிரிவுகளுக்கும் களுத்துறை மாவட்டத்தில் 5 பொலிஸ் பிரிவுகளுக்கும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

# ஊரடங்கு மீறல் கைதுகளுக்கு சிவில் பாதுகாப்பு அதிகாரிகள்

கொழும்பு, ஒக்.30
ஊரடங்குச் சட்டத்தை மீறுவோரைக் கைதுசெய்ய சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் இணைக்கப்பட்டுள்ளனர் என பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவிக்கையில், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுகின்றபோது வெளியில் உள்ளவர்களுடன் தொடர்புகொள்ள முடியாது. அத்துடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ள வீடுகளுக்கு வெளியில் இருந்து செல்பவர்கள் குற்றவாளிகளாகவே கருதப்படுவார்கள். மேலும் வர்த்தக நிலையங்கள் மற்றும் மருந்தகங்களின் முன்பு சமூக இடைவெளியைப் பேணாதவர்களும் கைதுசெய்யப்படுவர்.
அத்துடன் இந்த வார இறுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படாத பகுதியிலுள்ள மக்களும் சுற்றுலாப் பயணங்கள் செல்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (வ-இ)

# கிழக்கு மாகாணத்தில் வாழ்வாதார உதவிகள்

கிழக்கு மாகாணத்தில் கொரோனால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்வர்களுக்கு வாழ்வாதார உதவிகள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. திருகோணமலை மாவட்டத்திலுள்ள மூதூர் மற்றும் தம்பலகமம் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பயனாளிகளுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பயனாளிகளுக்கும் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. அகம் மனிதாபிமான வள நிலையத்தால் "வாழ்வாதாரமும் உணவு நிலைபேறு தன்மையும்"எனும் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் கொரோனாவால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்வர்களுக்கு இவ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.
(வ-இ)



# கொரோனா பரவல் கட்டுப்பாடு: ஊவாவில் விசேட கலந்துரையாடல்

கொழும்பு, ஒக்.30
கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்கு முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்த விசேட கலந்துரையாடல் ஒன்று ஊவா மாகாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இந்தக் கலந்துரையாடல் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தலைமையில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது அவர் தெரிவித்துள்ளதாவது,
கொரோனாப் பரவல் மீண்டும் ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டங்கள் அடங்கிய சுற்ற றிக்கையை கடுமையாகப் பின்பற்ற வேண்டும். அத்துடன் கெப்படிபொல மற்றும் பண்டாரவளை பொருளாதார மையத்தில் முன்னெடுக்கப்படும் வியாபார நடவடிக்கைகள் சுகாதார முறைமைகளைப் பேணி நடைபெற வேண்டும்.
மேலும் இந்தச் சட்டதிட்டங்களை மீறுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார். (ற-இ)

# ஞானசாரியார் கல்லூரிக்கு மரக்கன்றுகள்

கரணவாய், ஒக்.30
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழக உறுப்பினர்களால் மரக்கன்றுகள் கடந்த செவ்வாய்க்கிழமை கரவெட்டி ஞானசாரியார் கல்லூரிக்கு வழங்கப்பட்டன.
கரவெட்டி ஞானசாரியார் கல்லூரியைச் சுற்றியுள்ள வீதி ஓரங்களில் சுமார் 300 மீற்றர் தூரத்தில் இந்த மரங்கள் நடப்பட்டன.
கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக்கழக வீரர்கள் தமது சொந்தப் பணத்தில் இந்த மரக்கன்றுகளைக் கொள்வனவு செய்து வழங்கியுள்ளனர். (ற-422).

# களுத்துறையில் பல இடங்கள் தனிமையிலிருந்து விடுவிப்பு

களுத்துறை, ஒக்.30
களுத்துறையில் மத்துக-மபதுகம புதிய கொலணி பிரதேசம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்கள் அனைத்தும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என இராணுவத்தளபதி சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். அதற்கமைய மத்துகம பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஓவிட்டிகல, நவஜன உள்ளிட்ட அனைத்து பகுதிகளும் விடுவிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.
அண்மையில் மத்துகம பிரதேசத்திலுள்ள தனியார் வங்கி ஊழியர் ஒருவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது. தொடர்ந்து மத்துகம பேருந்து சாரதி ஒருவர் தொற்றுடன் இனங்காணப்பட்டார். அதனைத் தொடர்ந்து அவருடன் அனுராதபுரத்துக்கு யாத்திரை மேற்கொண்ட 17 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதியானது. களுத்துறை மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் தகவல்படி இதுவரையில் மத்துகம பிரதேசத்தில் மாத்திரம் 30 பேர் தொற்றுக்குள்ளாகி உள்ளனர்.
இதனையடுத்து, களுத்துறை மாவட்டத்தின் சில பகுதிகள் தனிமைப்படுத்தல் பிரதே சங்களாக அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத் தக்கது. (வ-இ)

# கல்முனையில் 12 பேருக்கு கொரோனாத் தொற்று

## கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

**கல்முனை, ஒக்.30**

**கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனைக்குட்பட்ட பிரதேசத்திலுள்ள 12 பேருக்கு கொரோனாத் தொற்று இனங்காணப்பட்டுள்ளது என்று கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் தெரிவித்துள்ளார்.**



பேலியகொட மீன் சந்தைக்கு சென்று வந்தவர்களுக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பேலியகொட மீன் சந்தைக்கு சென்று வந்தவர்களில் தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கே இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கல்முனை பிராந்தியத்தைப் பொறுத்தவரை நகர முடக்கம் அல்லது ஊரடங்கு அமுல்படுத்தவோ அவசியம் இதுவரை ஏற்படவில்லை.

ஏனெனில் நூற்றுக்கணக்கான பொதுமக்களிடம் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொண்டுள்ளோம். எந்தவித பரிசோதனை முடிவுகளும் பொசிடிவ் ஆக கிடைக்கப் பெறவில்லை.

இந்த நிலையில் பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வந்தவர்களில் தனிமைப்படுத்தப்பட்ட 16 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா நோய்த் தாக்கம் அதிகரித்துள்ள மாவட்டத்திலிருந்து வருகின்றவர்களும், எமது மாவட்டத்தில் இருந்து நோய்த் தாக்கம் அதிகரித்துள்ள மாவட்டத்துக்கு செல்கின்றவர்களும் போக்குவரத்தைக் குறைத்துக்கொள்ள வேண்டும்.

வெளி மாவட்டங்களுக்குச் சென்று வந்தால் உடனடியாக 077725 8376 எனும் இலக்கத்துக்கு தொடர்பு கொண்டு அல்லது குறுஞ் செய்தி மூலமாகவோ, வட்ஸ்அப் ஊடாகவோ எமது பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் இயங்கும் கொரோனாப் பரிசோதனை மையத்துக்கு தகவல்களை வழங்குவதன் மூலமாக எமது பிரதேசத்தை பாதுகாக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார். (ஈ-இ)



## சுகாதார சேவைகள் பணிப்பாளராக அசேல குணவர்தன நியமிப்பு

கொழும்பு, ஒக்.30

புதிய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமாக நியமிக்கப்பட்டுள்ள வைத்தியர் அசேல குணவர்தன, நேற்று வியாழக்கிழமை தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

சுகாதார அமைச்சிலுள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்ற சமய வழிபாடுகளுடன் அவர் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். இந்த நிகழ்வில், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (ஈ-இ)

## மத வழிபாட்டுக்கு 50 பேருக்கு குறைந்தோரே பங்கேற்குக

கொழும்பு, ஒக்.30

மத வழிபாடுகளுக்காக மக்களை ஒன்றிணைக்கும்போது 50 பேருக்கு குறைந்த நபர்களை ஒன்றிணைக்குமாறு சுகாதார அமைச்சால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசேடமாக எதிர்வரும் போயா தினத்தில் மக்கள் கூடுவதில் அதிக கவனம் செலுத்துமாறு இதன்போது வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வழமைபோன்று மத வழிபாடுகளை முன்னெடுக்க முடியாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ஈ-இ)

## வெவ்வேறு பகுதிகளில் நால்வருக்கு கொரோனா

கொழும்பு, ஒக்.30

வெவ்வேறு பகுதிகளிலுள்ள நான்கு பேருக்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை கொலிவூட் என்னும் இடத்தில் தங்கியிருந்த இந்தியர் ஒருவரும், பேலியகொட மீன் சந்தையின் பொலிஸ் சோதனைச்சாவடியில் கடமையிலிருந்த பொலிஸ் உத்தியோகத்தர், தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள களனி விசேட அதிரடிப் படை முகாமில் கடமையாற்றும் விசேட அதிரடிப் படை வீரர், மவுண்ட்லவனியாவிலுள்ள ஹொட்டல் ஒன்றில் வாகனச் சாரதியாக பணியாற்றும் ஒருவர் ஆகிய நால்வருமே இவ்வாறு கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் கந்தக்காடு கொரோனாச் சிகிச்சை மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஈ-இ)

## 3 மாத குழந்தைக்கும் கொரோனாத் தொற்று



கொழும்பு, ஒக்.30

மதுகம வலல்லாவிட பகுதியில் 3 மாதக் கைக்குழந்தைக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

குழந்தையின் தாய்க்கும் தொற்று உறுதியாகியுள்ளது. அவர்கள் இருவரும் ஐ.டி.எச் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றனர்.

இதையடுத்து அந்தப் பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது எனப்பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார். (வ-இ)

## காரைநகரில் புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்ப்பாணம் காரைநகர் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகக் குழுத் தெரிவு நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இந்தப் புதிய நிர்வாகக் குழுத் தெரிவு காரைநகர் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் ம.சந்திரமோகன் தலைவராகவும், மு.அமிர்தலிங்கம் செயலாளராகவும், த.தர்மலிங்கம் உபதலைவராகவும் தெரிவுசெய்யப்பட்டதுடன், நெறியாளர் குழு உறுப்பினர்களாக த.வரதராஜன், மு.பரமேஸ்வரன், த.குலேந்திரன், ந.ஜெயகுமார், த.தயாபரன், க.கவிதா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டனர். (ஈ-63)

## வீதியோர வியாபாரத்துக்கு மறு அறிவித்தல் வரை தடை

கிளிநொச்சி, ஒக்.30

பச்சிலைப்பள்ளி பிரதேசசபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் வெளிமாவட்டங்களிலிருந்து வருகைதந்து நடமாடும் வியாபாரம் மற்றும் வீதியோர நடைபாதை வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவது மறுஅறிவித்தல் வரை தடை செய்யப்பட்டுள்ளது என்று பளை பிரதேசசபை தவிசாளர் சுப்ரமணியம் சுரேன் தெரிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றிலிருந்து எமது பிரதேசத்தை பாதுகாக்கும் நோக்குடன் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும், இந்த நடைமுறைகளை மீறுவோரின் உடமைகள் பறிமுதல் செய்யப்படுவதுடன் சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் சபையின் உப அலுவலகங்கள் மூலமாக நடைமுறைப்படுத்தபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஈ-6)



## மீசாலையில் கைக்குண்டு மீட்பு

கொடிகாமம், ஒக்.30

மீசாலைப் பகுதியில் வெற்றுக் காணி ஒன்றிலிருந்து பழைய கைக்குண்டு ஒன்று சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைச் சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஈ-159)

# ஊரடங்கு கால வாடகைகள் அறவிடுவதில் விலக்களிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.30

உள்ளூராட்சி சபைகளுக்குச் சொந்தமான வர்த்தக நிலையங்களுக்கு கடந்த ஊரடங்கு காலப் பகுதிக்கான (மார்ச்20 தொடக்கம் ஏப்ரல் 20) வாடகைகளை அறவிடுவதில் விலக்களிக்குமாறு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அதேவேளை வியாபாரத்தின் தன்மை காரணமாக இயங்காத நிலையில் கடைகள் இருந்திருப்பின் அவை தொடர்பாக சபையின் செயலாளரால் உறுதிப்பாட்டறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் எனவும் அறிவித்துள்ளார்.

கொவிட்-19 காரணமாக பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் காரணமாக வர்த்தக நிலையங்கள் இயங்காமல் இருந்ததால் சபை அமர்வுகளில் சபைக்குச் சொந்தமான கடை அறைகளுக்கு மார்ச், ஏப்ரல் , மே போன்ற மாதங்களுக்கு வாடகை அறவிடுவதிலிருந்து விலக்களிக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தனர்.

உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கைகள் மேல் நடவடிக்கைக்காக பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளருக்கு சபைகளின் செயலாளர்களால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்குப் பதிலளிக்கும் வகையில் மேற்கண்டவாறு உள்ளூராட்சி சபைகளின் செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)



# அங்காடி வியாபாரிகள் கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலைய அங்காடி வியாபாரிகள் மற்றும் மாநகரப் பழ வியாபாரிகள் நேற்று யாழ். மாநகர சபைக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் நடத்தினர்.

மாநகர முதல்வரின் தன்னிச்சையான முடிவால் தாமும் தமது குடும்பங்களும் வாழ்வாதாரத்தை இழக்கும் சூழ்நிலைக்கு உள்ளாகியுள்ளனர் என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

யாழ்.நீதிமன்றத்தின் கட்டளையின் பின் தமக்கு 2010 ஆம் ஆண்டு, யாழ் மாநகர சபையால் கடைகள் வழங்கப்பட்டது எனவும் தற்போது முதல்வர் ஏதோ உள்நோக்கத்தோடு தமது அப்பிள் கடைகளை அப்புறப்படுத்த நினைக்கின்றார் என்றும் வியாபாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (எ-20)

## சுற்றுலாவிகளுக்கு நுவரெலியாவில் தடை

கொழும்பு, ஒக்.30

மறு அறிவிப்பு வரும்வரை அடுத்த சில நாள்களுக்கு உல்லாசப் பயணங்களுக்கு நுவரெலியாவுக்கு வருவதைத் தவிர்க்க வேண்டும் என்று நுவரெலியா மாவட்டச் செயலர் ரோஹனா புஷ்பகுமாரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவட்டச் செயலர் நேற்று ஊடகங்களுக்கு இந்த அறிக்கையை வெளியிட்டார்.

நுவரெலியாவில் உள்ள அனைத்து சுற்றுலாத் தளங்களும் மூடப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட ஏராளமான நோயாளிகள் நுவரெலியா மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். அதனால் நுவரெலியாவுக்கு வருவதில் ஆபத்து உள்ளது. நுவரெலியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் மீது தனிமைப்படுத்தப்பட்ட சட்டத்தின்படி தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கவும் பாதுகாப்புப் படையினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் மாவட்டச் செயலர் தெரிவித்துள்ளார். (எ)



## வீதியோரத்து மரம் திடீரென முறிந்தது

கொழும்பு, ஒக்.30

மல்லாகம் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு முன்பாக வீதியோரம் நின்ற மரத்தின் பெரியளவிலான கிளை ஒன்று முறிந்து வீழ்ந்ததில் தொலைத்தொடர்பு இணைப்பு கம்பங்கள் முறிந்து வீழ்ந்தன.

தெய்வாதீனமாக வீதியால் எவரும் பயணிக்காத நேரத்தில் அந்தக் கிளை முறிந்து வீழ்ந்துள்ளது. இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை நண்பகல் இடம்பெற்றது. வீதிக்குக் குறுக்கே மரக்கிளை வீழ்ந்ததால் அதனைச் உடனடியாக அகற்றி போக்குவரத்தை சீர் செய்ய நீதிபதிகள் வழங்கிய அறிவுறுத்தலுக்கு அமைய நீதிமன்ற உத்தியோகத்தர் விரைந்து நடவடிக்கை எடுத்தனர். (எ)



## தன்னம்பிக்கை என்பது சாராயம் அல்ல

சுகி.சிவம்

தன்னம்பிக்கை, சுயமுன்னேற்றம் குறித்து இப்போது ஒரு விழிப்புணர்வு இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. ஒவ்வொரு ஊரிலும் நிறைய சொற்பொழிவுகள், வகுப்புகள், பயிலரங்குகள், பணிமனைகள் நடைபெறுகின்றன. பயிற்றுநர்கள் பலர் தலைமைப் பண்பு, நிர்வாக இயல் குறித்துப் பயிற்சி தருகிறார்கள். இது நல்ல மாற்றம்தான். ஆனால்....

ஆனால் என்ன ஆனால்? பயிற்றுநர் பலர் வெற்றியாளரா என்றால், பதில் மௌனம். இன்னொரு பக்கத்தில் இன்னொரு ஆபத்து... வெறியேற்றுவது போல, "முடியும்... முடியும்... எல்லாமே எல்லாராலும் முடியும்" என்று 'மோட்டிவேட்' செய்கிறார்கள். பைத்தியக்காரர்கள். தன்னம்பிக்கை உரைகள், சுயமுன்னேற்றப் பயிலரங்குகள் சாராயக் கடை, கள்ளுக் கடை மாதிரி வெறியேற்றும் என்றால், போதை தரும் என்றால், அவை ஆபத்தில் கொண்டு போய்விடும் என்று எச்சரிக்கிறேன்.

எல்லாராலும் எல்லாமே முடியும். உண்மைதான். ஆனால் அதற்கு எவ்வளவு முயற்சி தேவைப்படும் தெரியுமா? கால விரயம் கணக்கில் கொள்ள வேண்டாமா? முதலில் அது அவசியமா?

ஒருவரால் எல்லாம் முடியும் என்று வெறியேற்றினால் ஒவ்வொன்றாக முயன்று காலத்தை வீணாக்கக்கூடாது. பிறகு தோற்றவர் பட்டியலில் உங்கள் பெயர் பதிவாகலாம்.

அவசியமான ஒரு சிலவற்றைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு அதிலும் 1, 2, 3 என்று முக்கியத்துவத்தை வரிசைப்படுத்திக் கொண்டு கவனமாக முயன்று ஒருவர் வெற்றியாளர் ஆக வேண்டும்.

கிராமப்புறங்களில் திட்டுவார்கள்... "நாய் வாய் வைத்த மாதிரி". ஒவ்வொன்றிலும் நுழைவது அநாவசியம். தேர்ந்தெடுத்துச் செயல்படுங்கள் வெற்றி நிச்சயம்.

இன்றைய 'மோட்டிவேஷனல்' முயற்சிகள் சிலரை வெற்றிப் போதைக்குள் வீழ்த்தும் சாராயக் கடைகள் மாதிரிப் புறப்பட்டுவிட்டன. அவை குறித்த என் எச்சரிக்கைகளும் கண்டனங்களும் உண்மையானவை. சமூக அக்கறை மிக்கவை. அரைகுறை அறிவுடையவர்கள், வெற்றியின் சூட்சுமம் விளங்காதவர்கள், தோல்வித் தேவதையின் தூதுவர்கள் பலர் இன்று பயிற்றுநர்களாகப் பவனி வருகிறார்கள். எச்சரிக்கை!

யாரோ சொல்லிவிட்டார்கள் என்பதற்காக எல்லா விஷயங்களிலும் மூக்கை நுழைத்துக்கொண்டு எல்லாமே முடியும் என்று இழுத்துப் போட்டுக்கொண்டு நீங்கள் அவமானப்பட வேண்டாம். நம்மிடத்தில் உள்ள திறமைகளை முதலில் வரிசைப்படுத்திக் கொள்வோம். முன்னேற்றத்துக்குத் தேவைப்படும் திறமைகளையும் அடுத்து வரிசைப்படுத்திக் கொள்வோம். பிறகு இரண்டு பட்டியலும் சரி பார்க்கப்பட்டு, வளர்க்கப்பட வேண்டிய திறமைகளில் கவனம் செலுத்தினால் நிச்சயம் வெற்றியைக் குவிக்கலாம்; தோல்வியைத் தவிர்க்கலாம்.

அரைகுறையான தன்முனைப்புப் பயிற்றுநர்கள் திருவள்ளுவரிடம் இருந்து தெரிந்துகொள்ள வேண்டிய முக்கியச் செய்தி ஒன்று இருக்கிறது.

'உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் உக்கி இடைக்கண் முறிந்தார் பலர்' என்பது அவரது ஆழம் மிக்க குறள்.

ஊக்கத்தின் ஊக்கி என்கிற வேலைதான் மேலே நான் விவரித்தது. அது தோல்வியில் முடியும் என்ற திருவள்ளுவர் கணிப்பு நுட்பமானது, திட்பமானது. அது அனுபவக் கொடை. ஆஹா... திருவள்ளுவரை நான் வழிமொழிவதா என்று தமிழ்நாட்டின் வறட்டு அறிவாளிகள், செல்லாக் காசுகள் சிலர் புருவத்தை உயர்த்துவார்கள் என்பதை நான் அறிவேன். ஆம், என்னைத் திருவள்ளுவரின் துரோகியாகச் சித்திரித்து ஒரு தோல்வியாளர்கள் கூட்டம் எழுதியும் பேசியும் சந்தோஷப்படுகிறது. அவர்கள் கிடக்கிறார்கள்... வள்ளுவக் கிழவனின் செல்லப் பேரனாகிய நான் என் வழிவழிச் சொத்தை, பரம்பரைச் செல்வத்தை உங்களோடு பங்கிட்டுக் கொள்கிறேன். இந்தக் குறள் Motivational Trainers சிந்திக்க வேண்டிய குறள்.

நடிப்பின் இமயமாக விளங்கிய மாபெரும் நடிகர் அரசியல் கட்சி ஆரம்பித்து பெரும் துன்பம் அடைந்தார், நினைவிருக்கிறதா?

உன்னதமான கர்நாடக இசையின் சக்கரவர்த்திகள் திரைப்படம் எடுத்துக் கையைச் சுட்டுக்கொண்டார்கள், நினைவிருக்கிறதா?

பாரம்பரிய புகழ்மிக்க தொழில் நிறுவனங்கள் சில தங்களுக்குத் துளியும் சம்பந்தமில்லாத புதிய துறைகளில் காலடிவைத்துக் கல்லடிபட்ட கதை உங்களுக்கு மறந்திருக்காதே! வாயும் வயிறும் வேகவேக ஊர் ஊராகப் போய்ப் பேசிச் சம்பாதித்த பணத்தை ஒரு பைனானஸ் கம்பெனியில் பார்ட்னர்ஷிப் வைத்து, புகழ்பெற்ற ஒரு சமயச் சொற்பொழிவாளர் தொலைத்தார்!

இது பலருக்கும் தெரியாத ரகசியம்! இப்போது வெளிப்படுத்தி இருக்கிறேன். இவை எதனால் நடந்தன? ஊக்கத்தின் ஊக்கி... இடைக்கண் நிகழ்ந்த முறிவுகள்!

எப்போதும் வெற்றியைப் பற்றி எழுதுகிற சுகி சிவம் தோல்வியைப் பற்றி எழுதுகிறாரே என்று அஞ்ச வேண்டாம்.

கார் வாங்கும்போது என்ஜின் வேகம், குதிரைத் திறம், பறக்கும் பலம் பார்த்தால் மட்டும் போதாது. பிரேக் பற்றிய பிரக்ஞை வேண்டும்.

கிரேக்கத்திலிருந்து இந்தியாவரை படை எடுத்து வந்து இடையில் செத்துப்போய் நாடு திரும்ப முடியாமல் போன அலெக்ஸாண்டரின் தோல்வி வரலாற்றில் கவனிக்கப்பட வேண்டியது. அதே மாதிரி தெரியாத விஷயங்களிலும் புரியாத தொழில்களிலும் கவனத்தையும் காலத்தையும் தொலைத்துவிட்டு இடைக்கண் முறிதல் வாழ்க்கையில் கவனிக்கப்பட வேண்டியது. முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியது. எனது எழுத்தில் இம்முறை எதிர்மறைச் சிந்தனைகளின் நெடி வீசுகிறதே என்று கவலை வேண்டாம். குண்டும் குழியுமான தோல்வியின் பாதையே இது என்று கண்டுபிடித்து அதைத் தவிர்த்துவிட்டு பயணம் செய்யுங்கள்.

# இன்றைய நாள்

**மேடம்:** பணியிடத்தில் ஏற்பட்டிருந்த இடையூறுகள் இன்று அகலும் உடன்பிறப்புகளால் கடன் சுமை குறையும். வெற்றிகள் கூடும். வீடுமாற்றம், இடமாற்றம் உண்டு. கடன் தொல்லை குறையும்.

**இடபம்:** பல நாள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்வீர்கள். உங்களது தவறால் பொதுவாழ்வில் இருந்த புகழ் குறையலாம். வம்புகளால் ஏற்பட்ட பிரச்னைகளைச் சமாளிப்பீர்கள்.

**மிதுனம்:** எதிரிகளின் பலம் குறையும். வளம் காணும் நாள். பொருளாதார முன்னேற்றம் முன்பைவிடச் சிறக்கும். பாதியில் நின்ற பணிகளை முனைந்து முடிப்பீர்கள்.

**கடகம்:** வரவு திருப்தி தரும். உறவினரின் தொல்லை தொடரும். வீட்டு உபயோகப் பொருள்களை வாங்குவதால் செலவு கூடும். அயல்நாட்டில் இருந்து வரும் தகவல் மகிழ்ச்சி தரும். ரணமாக முடிப்பீர்கள்.

**சிம்மம்:** யோசித்துச் செயல்படவில்லை என்றால் தொல்லை ஏற்படும். வம்புகளில் ஈடுபட வேண்டாம். அவசரத்தைத் தவிர்ப்பது நல்லது. தூரத்து உறவினர்களின் உதவி கிடைக்கும். புகழ் அதிகரிக்கும்.

**கன்னி:** பிறரிடம் எப்போதும் கனிவாகப் பேச கற்றுக்கொள்ளுங்கள். உங்களைப் புரிந்துகொள்ளாமல் செயல்பட்டவர்கள் மாறுவர். வாழ்வில் உயர்வதற்கான முயற்சிகளைச் செய்வீர்கள்.

**துலாம்:** பணவரவு சிறிது உண்டு. உறவினர்களின் செயல்கள் மனதிற்கு சந்தோஷத்தைக் கொடுக்கும். அருகில் உள்ளவர்களின் மூலம் ஆதரவைப் பெறுவீர்கள்..

**விருச்சிகம்:** அதிகாரிகள் கருணையுடன் நடந்து கொள்வர். ஆதாயம் உண்டு. புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றுவீர்கள் மனதிற்கு நிறைவு தரும் நிகழ்வுகள் நடைபெறும் நாள்.

**தனுசு:** வேலை சம்பந்தமான முயற்சிகளில் தாமதம் ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையின் ஆதரவு காரணமாக பிரச்னை அகலும். எதிர்ப்புகள் மாறும். தொட்டது துலங்கும். வெற்றி உண்டு.

**மகரம்:** எதிர்பார்த்த விஷயம் நடைபெற்று மகிழ்ச்சியைத் தரும். திட்டமிட்ட பய ணங்களால் பெரிய நன்மைகள் இருக்காது. தகவல் சந்தோஷப்படவைக்கும்.

**கும்பம்:** நேற்றைய பிரச்னைகள் முடிவிற்கு வரும் நாள். கடந்த சில நாளாக வாட்டி வந்த மனக்குழப்பம் அகலும். துணிவும், தன்னம்பிக்கையும் கூடும்.


**மீனம்:** தம்பதிகள் ஒருவரை ஒருவர் அனுசரித்துச் செல்வது நல்லது. தொழில் முன்னேற்றம் சற்றே அதிகரிக்கும் நாள். எதிர்பாராத பொன்னான தகவல் வரும். தயக்கம் தீரும்.

# டெங்கைக் கட்டுப்படுத்த மக்கள் ஒத்துழைக்குக!

## வேண்டுகோள் விடுக்கிறார் சுகாதார மருத்துவ அதிகாரி

சாவகச்சேரி, ஒக்.30

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் டெங்கு நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்துள்ளார்.




டெங்கை முழுமையாகக் கட்டுப்படுத்த தென்மராட்சி பிரதேச செயலர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் நிலையில், பொது மக்கள் வழங்கும் ஒத்துழைப்பால் பிரதேசத்திலிருந்து டெங்குப் பரவலைக் குறைக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

டெங்கைக் கட்டுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட முதல் கட்டப் பரிசோதனையில் டெங்குக் குடம்பிகள் காணப்படும் இடங்களை துப்புரவு செய்ய மூன்று தினங்கள் கால அவகாசம் வழங்கி சிவப்பு அறிவித்தல்படிவத்தை வழங்கி வருகின்றனர்.

இதேவேளை மூன்று தினங்களின் பின்னர் பரிசோதனைக் குழுவினர் நேரில் சென்று பார்வையிட்டு துப்பரவு செய்யப்படாத குடியிருப்பின் உரிமையாளருக்கு எதிராக பொலிஸார் மூலம் சட்ட நடவடிக்கை எடுத்தும் வருகின்றனர்.

தென்மராட்சி பிரதேச செயலகத்தால் கிராம அலுவலர் பிரிவு ஊடாக டெங்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், அங்குள்ள அனைத்து வீடுகளும் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவதால் தமது குடியிருப்புகள் மற்றும் காணிகளை டெங்கு நுளம்பு பெருகாது தடுக்க மக்கள் தமது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-9)





சௌபாக்கிய வீட்டுத் தோட்ட வேலைத் திட்டத்தின் கீழ் நாற்று வழங்கும் நிகழ்வு கடந்த 26ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு மீசாலை கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் கிராம அலுவலர் கௌரிதரன் தலைமையில் இடம்பெற்றது. பயனாளிகளுக்கு தக்காளி, கத்தரி, கறிமிளகாய் மற்றும் மிளகாய் நாற்றுக்கள் வழங்கப்பட்டன. (ந-159)

# மன்னாரில் வீட்டுத்தோட்ட செயற்றிட்டம்

மன்னார், ஒக்.30

சௌபாக்கியா வேலைத்திட்டத்தின் கீழ் மனைப் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நிகழ்சித் திட்டத்தின் ஊடாக கிராமங்களில் வீட்டுத் தோட்ட செய்கையை விரிவுபடுத்தும் செயற்றிட்டம் மன்னார் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தலைமையில் நேற்று முன் தினம் புதன்கிழமை மதியம் தாழ்வுபாடு கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. 'கொரோனா' அச்சுறுத்தல் நேரத்தில் மக்கள் வீட்டில் இருந்துகொண்டே வீட்டுத் தோட்டத்தை மேற்கொண்டு ஆரோக்கியமான உணவுகளை உற்பத்திசெய்து பலன் பெறும் வகையில் உருவாக்கப்பட்ட இச் செயற்திட்டத்தின் முதல் கட்டமாக தாழ்வுபாடு பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட 100 குடும்பங்களுக்கு மேற்படி பயன்தரும் தாவரங்கள் மற்றும் விதைகள் வழங்கப்பட்டன.

நிகழ்வில் மன்னார் மாவட்ட பதில் அரசாங்க அதிபர், மன்னார் பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர், மன்னார் மாவட்ட சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் கிராம அலுவலகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு மரக்கன்றுகளை வழங்கி வைத்ததுடன் மரக்கன்று நடுகையும் நடைபெற்றது. (ந)

# 20ஐ ஆதரித்தோரை அகற்றியது ஐ.ம.ச.

கொழும்பு, ஒக். 30

20ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த 9 பேரும் ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

இதனால் அவர்களுக்கு நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியினர் பக்கம் ஆசனங்களை ஒதுக்குமாறு எதிர்க்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

20ஆவது அரசமைப்புத் திருத்தம் மீதான வாக்கெடுப்பு கடந்த 21ஆம் திகதி நடத்தப்பட்டது. இந்தத் திருத்தத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் 9 உறுப்பினர்கள் தங்களின் ஆதரவை வழங்கியிருந்தனர்.

டயானா கமகே, அருணாசலம் அரவிந்த குமார், இஷாக் ரஹ்மான், பைசல் காசிம், ஹரிஸ், தௌபீக், நசீர் அஹமட், ரஹீம், முஷாரப் ஆகியோர் சட்டவரைபுக்கு ஆதரவளித்தனர். இந்த உறுப்பினர்களுக்கான ஆசனங்களை ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் வரிசையிலிருந்து நீக்கி, ஆளும் கட்சியின் ஆசன வரிசையில் ஒதுக்க நடவடிக்கை எடுக்குமாறு எதிர்கட்சியின் பிரதம கொறடா கோரிக்கை விடுத்துள்ளார். (ம-இ)

# பொருளாதார நிலைய வர்த்தக நிலையங்கள் தற்காலிக பூட்டு

அநுராதபுரம், ஒக்.30

அநுராதபுரம், தம்புத்தேகம பொருளாதார நிலையத்தில் 11 வர்த்தக நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. மீகொட பொருளாதார நிலையத்திலிருந்து தம்புத்தேகம பொருளாதார நிலையத்துக்கு வருகைதந்த தொழிலதிபர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மீகொடையிலிருந்து வந்த கொரோனா நோயாளருடன் தொடர்புகளைப் பேணிய இருவர் கொரோனாத் தொற்றுக் குள்ளாகியுள்ளனர். இதன் விளைவாக தம்புத்தேகம பொருளாதார நிலை யத்தில் சுமார் 100 நபர்கள் தனிமைப் படுத்தலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். (ந-இ)

## மின்சார சபையும் தயார் நிலையில்!

கொழும்பு, ஒக்.30
ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் மின்சாரம் தொடர்பில் பிரச்சினைகள் ஏற்பட்டால் அதற்கு உடனடியாகத் தீர்வை பெற்றுக்கொடுப்பதற்கு பராமரிப்புப் பிரிவு தயாராக உள்ளது என்று இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சபையின் தலைவர் விஜித்த ஹேரத் தெரிவித்துள்ளதாவது: நாட்டில் நிலவும் தற்போதைய நிலைமைக்கு மத்தியில் பொதுமக்களுக்கு தடையின்றி மின்சாரத்தை வழங்குவதே முக்கிய நோக்கம். பராமரிப்புப் பிரிவு 24 மணித்தியாலயமும் செயற்படும். நாடு எதிர்கொண்டுள்ள இடர் நிலைமையில் எமக்கும் பொறுப்புக்கள் உண்டு. மின்சார சபை ஊழியர்கள் மின் உற்பத்தி நிலையங்களில் 24 மணித்தியால கடமையில் ஈடுபட்டுள்ளனர். மின் துண்டிப் புக்களைச் சீர்படுத்துவதற்கும் பராமரிப்பு குழுவினர் செயற்படுகின்றனர். ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள கம்பஹா மாவட்டத்திலும் கவனம் செலுத்தியுள்ளோம். மின்சார துண்டிப்பு, மின்சார பிரச்சினைகள் தொடர்பில் 1988 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு தொடர்புகொண்டு தகவல்களை வழங்குவதன் மூலம் குழுவினர் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள். என்றார். (எ)

# அரச சேவைகளை தடையின்றி முன்னெடுக்க வேண்டும்

### உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ரத்னசிறி தெரிவிப்பு

**கொழும்பு, ஒக்.30**

**அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படும் கொவிட் - 19 வைரஸ் தொற்றுப் பரவலைத் தடுக்கும் வேலைத்திட்டம் மற்றும் அதற்கமைவாக ஏனைய அரச சேவைகளைத் தடையின்றி முன்னெடுக்க வேண்டும் என்று அரச சேவை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் ரத்னசிறி தெரிவித்துள்ளார்.**

மேலும், தற்போது உள்ள நிலைமை தொடர்பில் கவனம் செலுத்தி அர்ப்பணிப்புடன் கடமைகளை ஆகக்கூடிய வகையில் நிறைவேற்றுவதில் அரச அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் என்று இதன் மூலம் வலியுறுத்துகின்றேன்.

அத்துடன், கொவிட் - 19 வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரச நிறுவனங்களின் பிரதானிகளினால் கடைப்பிடிக்க வேண்டிய ஆலோசனைகளை உள்ளடக்கி ஜனாதிபதியின் செயலாளரினால் வெளியிடப்பட்ட 2020 ஏப்ரல் 18 திகதி 2020 மே மாதம் 14 ஆம் திகதி சுற்றறிக்கைகளில் கவனம் செலுத்தி அந்த சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய ஊழியர்களை சேவைக்கு அழைத்தல் மற்றும் நிறுவனங்களை நடத்திச்செல்வதுடன் அந்த சுற்றறிக்கைகளில் குறிப்பிட்டபடி அரசாங்க அதிகாரிகள் மற்றும் பொதுமக்களின் சுகாதாரப் பாதுகாப்புக்காகக் கடைப்பிடிக்க வேண்டிய அனைத்து சுகாதார ஆலோசனைகளுக்கு அமைவாக செயல்பட வேண்டும் என்றும் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (ந-இ)

சாவ. இந்து ஆரம்ப பாடசாலையின்

## தரம் 1 அனுமதிக்கான பெயர்ப்பட்டியல்

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் 2021 ஆம் ஆண்டு தரம் 1 அனுமதிக்காக தெரிவுசெய்யப்பட்டவர்களின் முதலாவது பெயர்ப்பட்டியல் பாடசாலையின் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

விண்ணப்பித்த பெற்றோர் பட்டியலைப் பார்வையிட்டு தமது பிள்ளைகளின் பெயர்கள் பட்டியலில் இடம்பெற்றதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும், நேர்முகப் பரீட்சைக்கு சமூகமளித்தும் முதலாவது பட்டியலில் அனுமதி கிடைக்காத பெற்றோர் மேன்முறையீட்டு அனுமதிக் கோரிக்கையை விரும்பின் எழுத்து மூலம் எதிர்வரும் நவம்பர் 15 ஆம் திகதிக்குமுன் சமர்ப்பிக்க முடியும் எனவும் அதிபர் தெரிவித்தார். (ந-159)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



## அமரர் இராசதுரை புஸ்பராஜா
## (ஆனந்தி அப்பா)

கடந்த (01.10.2020) அன்று இறைபதம் அடைந்த எமது தந்தையின் அந்தியேட்டி கிரியைகள் நாளை (31.10.2020) சனிக்கிழமை அன்று அதிகாலை 5 மணியளவில் ஆலடி வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெற்று "ஊறணி புனித தீர்த்தக் கடலில்" அஸ்தி கரைக்கப்பட்டு சபிண்டீகரண கிரியைகள் அதேதினம் நண்பகல் 12 மணியளவில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அப்பாவின் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

**(இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்பாக கேட்டுக் கொள்கிறோம்)**

எமது அன்புத் தந்தையின் மறைவுச் செய்தியறிந்து எமது துயர்பகிர நேரில் கலந்துகொண்ட உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அனைவருக்கும் அனுதாப செய்திகளை தொலைபேசி, குறுஞ்செய்தி, இணையத்தளங்கள், அஞ்சலி பிரசுரங்கள் மூலம் தெரிவித்தவர்களுக்கும், பல்வேறு வகைகளிலும் இன்று வரை எம்மோடு தோளோடு தோள் சேர்த்து, கையோடு கைகோர்த்து நிற்கும் அனைவருக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆலடி, வல்வெட்டித்துறை
0212265156, 0770424625

அன்புடன்
குடும்பத்தினர்

# முஸ்லிம்களை அடக்கம் செய்யும் உரிமையை மீட்டுத் தாருங்கள்

## தௌஹீத் ஜமாஅத் அமைப்பு கோரிக்கை

**கொழும்பு, ஒக்.30**

**கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்தவர்களை அடக்கம் செய்வதற்கான உரிமையை மீட்டுத் தர வேண்டும் என சிலோன் தௌஹீத் ஜமாஅத் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.**

இந்த விடயம் தொடர்பாக சிலோன் தௌஹீத் ஜமாஅத் அமைப்பு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் உள்ளதாவது;

நம் நாட்டில் கொரோனா பரவல் தற்போது தீவிரமடைந்துள்ளதுடன், மரண வீதமும் அதிகரித்து வருகின்றது. இந்தக் கடிதம் எழுதப்படும் வரை 19 பேர் வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் கொரோனாவினால் உயிரிழக்கும் முஸ்லிம்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டு, எரிக்கும் நிலை நம் நாட்டில் உருவாகியுள்ளது. இதுவரை மரணித்தவர்கள் அனைவரும் எரிக்கப்பட்டுள்ளார்கள். உலக நாடுகள் பலவும் கொரோனாத் தொற்றில் உயிரிழப்போரை அடக்கவும் எரிக்கவும் அனுமதித்துள்ளன. அவரவர் மத அனுஷ்டானங்களின் அடிப்படையில் செய்து கொள்வதற்கான உரிமையை வழங்கியுள்ளன. ஐரோப்பிய நாடுகள், அமெரிக்கா உள்ளிட்ட வளர்ச்சியடைந்த நாடுகள் என அனைத்தும் கொரோனாவில் உயிரிழந்தவர்களை அடக்கம் செய்ய அனுமதி வழங்கியுள்ளன. நம் அண்டை நாடான இந்தியாவில் கூட அடக்கம் செய்வதற்கு பூரண அனுமதி வழங்கப்பட்டுள்ளதை எம்மைவிட தெளிவாக நீங்கள் அறிவீர்கள். ஆனால், நம் நாட்டில் அடக்கம் செய்வதற்கு உரிமை மறுக்கப்பட்டு, கொரோனாவில் உயிரிழப்பவர்கள் எரிக்கப்பட்டு வருகின்றார்கள். இந்த நடைமுறை இஸ்லாமியர்களாகிய எம்மை மனதளவில் மிக ஆழமாக பாதித்துள்ளது என்பதை உங்கள் கவனத்துக்கு கொண்டு வர விரும்புகின்றோம்.

இலங்கையில் தற்போது 20வது அரசியல் சீர்திருத்தம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்று அதிகாரம் பொருந்திய ஜனாதிபதியாக தாங்கள் மாறியுள்ள நிலையில், இஸ்லாமிய சமூகத்தின் மத உரிமையையும் முஸ்லிம்களின் மனநிலையையும் முழுமையாக கவனத்தில் கொண்டு ஜனாதிபதிக்குள்ள தனித்த நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தி மரணித்தவர்களை அடக்கம் செய்வதற்கான உரிமையை மீட்டுத் தர வேண்டும் என உங்களை அன்பாக கேட்டுக் கொள்கிறோம்- என்றுள்ளது.

(ப)

வேலணையில்

# கட்டாக்காலி மாடுகளை கட்டி வளர்க்கத் திட்டம்

வேலணை, ஒக்.30

வேலணைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளில் நடமாடித் திரியும் கட்டாக்காலி மாடுகளை, கட்டி வளர்ப்பது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச செயலகத்தில் கட்டாக்காலிகள் தொடர்பான கூட்டத்தொடர் ஒன்று நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தொடரில் யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு இணைத் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வேலணை பிரதேச செயலகர் அம்பலவாணர் சோதிவாணன், வேலணை பிரதேசசபை தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி, அரச உத்தியோகத்தர்கள், விவசாயிகள், பண்ணையாளர்கள், மத தலைவர்கள், பொது மக்கள் என பலர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தொடரில், தீவக பிரதேச செயலக எல்லைக்குள் நீண்டகால இடப்பெயர்வின் காரணமாக கைவிடப்பட்ட நிலையிலிருந்த கால்நடைகள் கடந்த 20 வருடங்களாக பெருகி ஆயிரக்கணக்கில் பிரதேசத்தில் உரிமை கோரப்படாத கட்டாக்காலிகளாக சமூகத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளன. எனவே இது தொடர்பாக தீர்வு வேண்டும் என்று விவசாயிகள் கோரியிருந்தனர்.

இந்நிலையில் வேலணை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பகுதியில் வசிக்கும் குடும்பத்தினர் அப்பகுதி கிராம அலுவலர் ஊடாக விண்ணபிக்கும் போது ஒரு குடும்பத்திற்கு 5 மாடுகள் வீதம் கட்டாக்காலி மாடுகளைக் கட்டி வளர்க்க ஏற்பாடு செய்யப்படும், அத்தோடு, அவற்றுக்கான பராமரிப்புக்காக 3000 ரூபா வழங்கப்படும் எனவும் பண்ணையாக உருவாக்கப்படும்போது 50 மாடுகள் வீதம் வழங்கப்படும் எனவும் எக்காரணத்திற்காகவும் வழங்கப்படும் மாடுகளை விற்க முடியாது எனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

(ப)

# தருமபுரத்தில் கோடா மீட்பு

தருமபுரம், ஒக்.30

தருமபுரம் கட்டைக்காட்டுப் பகுதியில் கசிப்பு வடிக்கத் தயாராக இருந்த ஏழு பரல் கோடா தருமபுரம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

தருமபுரம் பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து தருமபுரம் கட்டைக்காட்டுப் பகுதியில் உள்ள குஞ்சுக்குளப்பகுதியில் நேற்று பொலிஸார் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர். இதன் போது கசிப்பு வடிப்பதற்குத் தயார் நிலையில் இருந்த ஏழு பரல் கோடாவும் கசிப்பு வடிக்கும் உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர்கள் தப்பியோடிய நிலையில் எவரும் கைது செய்யப்படவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

(ப-ரி1)

# இடமாற்றம் இன்றி உத்தியோகத்தர்கள்

## முல்லையில் இந்த நிலை



முல்லைத்தீவு, ஒக்.30

இடமாற்றங்கள் வழங்கப்படாது 80க்கும் மேற்பட்ட வெளிமாவட்ட உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடயைாற்றி வருகின்றனர் என்று முல்லைத்தீவு, மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த குறிப்பாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 80க்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் 8 ஆண்டுகளாகக் கடமையாற்றி வருகின்றார்கள். நீண்டகாலமாக இடமாற்றம் கிடைக்காமல் இவர்கள் கடமையாற்றி வருகின்றார்கள். இடமாற்றச் சுற்று நிரூபத்தின்படி இவர்களை இடம் மாற்றுவதில் பெரும் சவால்கள் காணப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இருந்து யாரும் இடம்மாறி வந்தால்தான் இங்குள்ளவர்களை விடுவிக்கமுடியும். அரச உத்தியோகத்தர்களைப் பலவந்தமாக இடம்மாற்றம் செய்யமுடியாது- என்றார்.

(ப-19)

பாகிஸ்தான் வழியாக இலங்கைக்கு போதைப்பொருள்;

# ஆப்கானிஸ்தான் தூதுவரின் கருத்தை மறுத்தது பாகிஸ்தான்

கொழும்பு, ஒக்.30

தலிபான் தயாரிக்கும் போதைப்பொருள்கள் பாகிஸ்தான் வழியாக இலங்கைக்குக் கொண்டு வரப்படுகிறன என்ற கருத்தை கொழும்பில் உள்ள பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் நிராகரித்துள்ளது.

உள்ளூர் ஊடகமொன்றுக்கு ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதாரி தெரிவித்த இந்தக் கருத்தானது ஒரு நட்பு நாட்டின் (இலங்கையின்) குடிமக்களைத் தவறாக வழிநடத்தும் ஒரு முயற்சியாகக் காணப்படுவதாகவும் கொழும்பில் அமைந்துள்ள பாகிஸ்தான் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

சந்தேகத்திற்கு இடமின்றி, பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போராட்டத்தில் பாகிஸ்தான் ஒரு முன்னணி நாடாக இருந்து வருகிறது. பயங்கரவாதத்திற்கு எதிராக பாகிஸ்தானின் இந்த முக்கிய பங்கு உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. துரதிர்ஷ்டவசமாக, ஆப்கானிஸ்தானின் அரசாங்கமற்ற இடங்களில் பாதுகாப்பான புகலிடங்களைக் கொண்ட பயங்கரவாதிகளின் கைகளில்பாகிஸ்தானே தொடர்ந்து பாதிக்கப்படுகிறது. அந்தப் பயங்கரவாதிகளினால் பாகிஸ்தான் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்தும் அழிவையே சந்தித்து வருகிறது என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ப-இ)

யாழ் மாநகரில்

# வாய்க்காலை மறித்து மதில்; எதிர்த்து மக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட ஆறுகால்மடம், பழம் வீதியில், வீதி வாய்க்காலை மறித்து சட்ட விரோதமாக மதில் கட்டும் செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் யாழ்ப்பாண மாநகர சபையினருக்குத் தெரியப்படுத்தியும், இன்று வரை எந்தவித நடவடிக்கையும் எடுக்காது அசண்டையீனமாகச் செயற்படுகின்றனர் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.


வெள்ளம் வடிந்து செல்லும் வாய்க்காலில் தனி நபர் ஒருவரால் ஒரு பகுதி கையகப்படுத்தப்பட்டு, மதில் கட்டுமானப் பணிகள் இடம்பெறுவதால், தமது பகுதிகளில் வெள்ள நீர் வடிந்தோட முடியாமல் தேங்கி மாரி காலத்தில் தாம் பல அசௌகரியங்களை எதிர்கொள்ள நேரிடும் என போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

"நியாயமற்ற மாநகர சபையே எமது மக்களுக்கு நியாயம் தா? விலை போகாதே " என பதாதைகளை ஏந்தியவாறு அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

(ப-111)

# பிறந்தநாள் நினைவலைகள்

மலர்வு
30 . 10 . 1985



உதிர்வு
18 . 05 . 2018

## கோபாலபிள்ளை குகன்

(முகாமைத்துவ உதவியாளர் சேவை - அதிசிறப்புத் தரம்)

கார்த்திகை மலரே எங்கு சென்றாயோ! - நீ
சாங்கமித்த கருவறை ஏங்கித் தவிக்கிறது
பத்துத்திங்கள் பக்குவமாய் அன்னை உதரத்தில் உறங்கினாய்
பார்போற்றும் உத்தமனாய் மிளிர பூமித்தாய் பெற்றெடுத்தாள் உன்னை
மாரிமழை பொழிந்திட அன்னையவள் கரங்களில் தவழ்ந்து
மன்னவன் தன்மனை காண மலர்ந்த நன்நாள் இன்றல்லவா!
கண்ணீர் மலை சொரிய கருமேகம் இருள்சூழ
அன்னை மடியகன்று மண்ணில் பெயர்பதித்து
விண்ணில் மறைந்து நீள்துயில் கொண்டது ஏனோ?
ஆயிரம் கனவுகளோடு உனைப் பெற்றெடுத்தாள் அன்னை
கனவுகள் கனிந்திடும் வேளை கோலம் கலைந்ததடா.
நீ நடந்து வரும் அழகு கண்டு புற்கள் கூட தலையசைக்குமே
அழும் குழந்தைகூட உன் குரலோசை கேட்டு மெல்லச் சிரிக்குமே!
குறைவில்லா அன்பைப் பொழிந்து குணத்திலே உயர்ந்து நின்றாய் குகனே!
எம் மனையில் பட்டாம் பூச்சியாய் சுற்றித் திரிந்தாய்
கண்ணிமைக்கும் நேரத்தில் மின்மினிபோல் மறைந்தாய்
ஐந்தறிவு ஜீவன்கூட உன்னால் துன்பம் அடைந்திராது
அந்தக் கயவன் உன்னுயிரை மாய்த்துக் கண்ட இன்பம் எதுவோ?
எம் அன்பு பொக்கிஷம் அவனியிலே பவனி வர
படைத்தவனுக்கு பிடிக்கவில்லையா?
இறைவா ! இது விதியா ! சதியா !

**என்றும் உன் நினைவில் வாடும்**

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.
8ஆம் வட்டாரம், வேலணை மேற்கு.

# மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 07 . 1944



மறைவு
29 . 10 . 2020

## இராசையா சந்திரவதனா

அச்சுவேலி உலவிற்குள பிள்ளையார் கோவிலடியை பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா சந்திரவதனா அவர்கள் நேற்று (29.10.2020) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சின்னம்மா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தர்-சின்னாச்சி தம்பதியரின் மருமகளும், இராசசேகரம் (ஓய்வுநிலை அதிபர், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி), கமலகுமாரி, வசந்தமாலினி (ஆசிரியை, யா/கோப்பாய் நாவலர் வித்தி.), நந்தகுமார் (சுவிஸ்), சுந்தரலிங்கம், பிறேமளா (கனடா), காலஞ்சென்ற துஸ்யந்தினி ஆகியோரின் அன்புத் தாயாரும், மனோரஞ்சினி, ஜெயராசா, கிரேதாகரன் (ஆசிரியர், கோப்பாய் மகா வித்தி.), ரதினி (சுவிஸ்), செல்வந்தி (கோப்பாய் அரசினர் வைத்தியசாலை), சதீஸ் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், கபிலன்-வித்தியா (சுவிஸ்), சகிலன், கோகுலன்-பிரதுஷா (ஜேர்மனி), கிருத்திகா, ஜனோஜன், செந்தூரி-ஜனகன், தாரணி, கீதஜெயன், சர்மிஜா, லோகிஷன், பதுமிதா, தூரிகன், தீபிகா, மயூரன், அகல்யா, நிதுஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆருத், கவின்யா, ஆதித் ஆகியோரின் பூட்டியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2020) வெள்ளிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கிளுவானை வீதி,**
**கோப்பாய் மத்தி, கோப்பாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு
## மீள்கேள்வி அறிவித்தல் திருத்தம் - 2021

2020.10.29 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட மீள்கேள்வி அறிவித்தலில் ஏற்கனவே கேள்வி கோரல் மூலம் வழங்கப்பட்ட விசுவமடு பொதுச் சந்தை கோழியிறைச்சிக்கடை,ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை என்பன தவறுதலாக மீண்டும் பிரசுரிக்கப்பட்டுள்ளமையினால் இவற்றுக்கான கேள்வி கோரல் இடம்பெறாது என அறியத்தரப்படுகின்றது.

**அ.தவகுமாரன்,**
**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு.**
**2020.10.30**

# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை
# பகிரங்க ஏல விற்பனை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் உள்ள பழைய பத்திரிகைகள் மற்றும் வெட்டிய மரங்களினை பகிரங்க ஏலத்தில் விடப்படவுள்ளன.

இடம் : உப அலுவலகம், புலோப்பளை. பளை.
திகதி : 09.11.2020
காலம் : மு.ப 10.00 மணி

**நிபந்தனைகள்:**

- ஏலதாரராக கலந்துகொள்பவர் ரூபா 100.00 மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக செலுத்துவதுடன் ரூபா 500.00 மீளளிக்கக் கூடிய வைப்புப்பணமாக செலுத்தவேண்டும்.
- சித்தியடைந்த ஏலதாரர் அன்றைய தினமே ஒப்புக்கொண்ட ஏலத்தொகையின் முழுத் தொகையினையும் செலுத்தி பொருட்களை அலுவலகத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.
- உரிய பொருட்களை பார்வையிட விரும்புவோர் மற்றும் மேலதிக விபரங்களை பெறவிரும்புவோர் அலுவலக கடமை நேர நாட்களில் காலை 8.30 முதல் மாலை 4.15 வரை தொடர்பு கொள்ளலாம்.
- மேலதிக நிபந்தனைக்கு கட்டுப்படுதல்வேண்டும்.
- தற்கால சூழ்நிலையை கருத்தில்கொண்டு ஒழுகுதல் வேண்டும்.

**சு.சுரேன்**
**தவிசாளர்**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**
29.10.2020

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
17 . 03 . 1929



உதிர்வு
10 . 11 . 2019

கரம்பொன் கிழக்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும்
வசிப்பிடமாகவும் அரசு ஊழியர் குடியிருப்பு ஓமந்தை,
வவுனியாவில் வசித்து வந்தவரான

## திருமதி பகவதியம்மா மரியாம்பிள்ளை

***திதி ஐப்பசி வளர்பிறை சதுர்த்தசி 30.10.2020***

பெற்றாய் எமையெல்லாம் பேதமின்றி அன்பு செய்து கற்றவராக்கி கருணைபொறை தர்மமெலாம் சற்றும் குறைவின்றி அளித்தெம்மை உருவாக்கி நற்றாயாய் வழிகாட்டி நாளெல்லாம் மனம் நிறைந்தாய் மற்றவரும் போற்றும் மாண்புநிறை மாதரசாய் உற்றதுணையாக வழிகாட்டி வாழ்ந்த தாயே பெற்றவளே யுனையிழந்து ஓராண்டு ஆனதம்மா போற்றுகிறோம் இறைவனையே தினம் உன்னாத்ம சாந்திக்காய்.

**அரச ஊழியர் குடியிருப்பு ஓமந்தை,**
**வவுனியா.**

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

# நாட்டை முடக்காவிடில் கொரோனா கட்டுப்படாது!

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 30

"குறைந்தது இரு வாரங்களுக்காவது நாட்டை முழு அளவில் முடக்காது கொவிட்-19 வைரஸ் பரவலை ஒரு போதும் கட்டுப்படுத்த இயலாது. மருந்து கண்டுபிடிக்கப் படாத நிலையில் அரசு இதைவிட அவதானமாக இருந்திருக்க வேண்டும்" என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மலையகத்துக்கு தனிப்பட்ட பயணம் மேற்கொண்டிருந்த அவர் கொழும்புக்கு நேற்றுத் திரும்பியிருந்தார். அங்கு கட்சி உறுப்பினர்களைச் சந்தித்து பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்தார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பி.சி.ஆர். பரிசோதனைகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமாறு வலியுறுத்தினேன். ஆனால் நோயாளிகள் இல்லை என முழு அளவில் பரிசோதனைகள் அனைத்தும் இடைநிறுத்தப்பட்டன. குறிப்பிட்ட சில மருத்துவ மனைகளில் மாத்திரம் சந்தேகத்துக்கிடமான நோயாளிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனால் தற்போது நிலைமை பெருமளவில் மோசமடைந்துள்ளது.

கொவிட-19 வைரஸீக்கு இன்னும் மருந்து கண்டுப்பிடிக்கப்படாத நிலையில் சுகாதார அமைச்சு இதனைவிட அவதானமாக இருந்திருக்க வேண்டும். என்றார். (த-இ)

---



அருள்மிகு

### ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம் திருகோணமலை

### கௌரி விரத விவரம்

இம்முறை நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக திருக்காப்புக்கள் 27.10.2020 முதல் விநியோகிக்கப்படுகிறது. பெட்டிக்காப்பில் உள்ள காப்புக்களும் கொடுக்கப்பட்டு வருகின்றன. பெட்டி பிரசாதத்தினை நிலைமைகள் சீராக வந்ததும் கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்படும். திருகோணமலை மாவட்டம் உட்பட வெளியூர் மாவட்டங்களைச் சேர்ந்த அனைவரும் திருக்காப்புக்களை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். 14.11.2020 கௌரிவிரதம் நிறைவுநாள் ஆகவே 12.11.2020 இற்கு முன்பாகவே உங்கள் திருக்காப் புகளை ஆலயத்திற்கு வந்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**சோ. இரவிச்சந்திரக்குருக்கள்**
**பிரதமகுருவும் & ஆதீனகர்த்தாவும்**
**அருள்மிகு**
**ஸ்ரீபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்**
**திருகோணமலை**

---

### ENGLISH PERSONAL CLASSES

**ஆங்கிலம்**
**பிரத்தியேக வகுப்புகள்**
அனுபவம் மிக்க ஆசிரியரினால்
உங்கள் வீடுகளுக்கு வந்து
கற்பிக்கப்படும்.

077 658 9443 யாழ்ப்பாணம்

---

### 2ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 23 . 08 . 1963



உதிர்வு 23 . 10 . 2018

### அமரர் சிவப்பிரகாசம் சிறீக்குமரன்

பிறந்த இடம் மண்டைதீவு - 02
வாழ்ந்த இடம் சுவிஸ்
*திதி: சதுர்த்தசி – 30.10.2020*


எங்கள் குடும்ப குலவிளக்கே!
ஆண்டுகள் இரண்டு ஆனாலும் உங்கள் அன்பு முகம் மறையவில்லை
எமக்கெல்லாம் நல்ல வழிகாட்டியாகவும் உறுதுணையாகவும் வாழ்ந்த
நீங்கள் விதி செய்த விளையாட்டில் எம்மையெல்லாம் மீளாத்துயரில்
ஆழ்த்திவிட்டு தனியே சென்றதேனோ
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவழியாது எம்முடனே வாழும்
உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல முத்துமாரி அம்மனை வேண்டி நிற்கிறோம்.

*ஓம் சாந்தி ! சாந்தி!! சாந்தி!!!*

**குடும்பத்தினர்.**

---

### கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் நீண்ட கால பரிபாலன தர்மகர்த்தா சபையின் உறுப்பினரும். தேர்த்திருப்பணிச் சபையின் கௌரவ பொருளாளரும். இராஜ கோபுரத் திருப்பணிச் சபையின் ஆலோசகரும் ஆலய வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவருமான எங்கள் அன்புக்கும். பெருமதிப்புக்குமுரிய

### இராமநாதர் வைத்திலிங்கம்

ஓய்வுநிலை கிராம அதிகாரி
புங்குடுதீவு மத்தி.கிழக்கு

பிறப்பு 14.09.1930 இறப்பு 24.10.2020

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது சபையின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா புங்குடுதீவு பாணாவிடைச் சிவனின் பொற்பாதங்களைச் சென்றடைந்து பேரின்ப பேறடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபை**
**புங்குடுதீவு பாணாவிடைச் சிவன் தேவஸ்தானம்.**

**7ஆம் வட்டாரம்,**
**புங்குடுதீவு**

---

### நல்லூர் பிரதேச சபையின் மீள்கேள்வி கோரல் விளம்பர திருத்தம்

29.10.2020ஆம் திகதிய பத்திரிகையில் 17ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட சந்தை மற்றும் இறைச்சிக்கடைகளிற்கான மீள்கேள்வி கோரல் விளம்பரத்தில் கேள்விப் பத்திரம் வழங்கும் திகதியில் குறிப்பிடப்பட்ட "29.11.2020 - 11.11.2020 புதன்கிழமை பி.ப 2.00 மணி" என்பதனை "29.10.2020 - 11.11.2020 புதன்கிழமை பி.ப 2.00 மணி" என திருத்தி வாசிக்கவும்.

**தா.தியாகமூர்த்தி**
**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.**
**30.10.2020**

---

### கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை திருமதி வசந்தமாலினி கிரேதாகரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி

### சந்திரவதனா இராசையா

அவர்கள் நேற்று (29.10.2020) வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாடசாலைச் சமூகம்**
**யா/கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்**

---

### 31ஆம் நாள் நினைவு வழிபாடும் நன்றி நவிலலும்

தோற்றம் 06 . 08 . 1941



மறைவு 30 . 09 . 2020

### அமரர் திருமதி ஜெரல்டீன் சரோஜா ஆறுமுகவடிவேல்

நாம் இந்த உடலில் குடியிருந்தாலும் குடிபெயர்ந்தாலும்
அவருக்கு உகந்தவராயிருப்பதே நம் நோக்கம்
(2 கொரி 5:9)

எமது அன்புத் தாயாரின் 31 ஆம் நாள் நினைவு வழிபாடு இன்று (30.10.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரது மறைவுச் செய்தி கேட்டு எம்முடன் துயரினை பகிர்ந்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

பிள்ளைகள்
077 728 1879
077 781 2488

---

### பதின்மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 14 . 11 . 1924



மறைவு 25 . 10 . 2007

### அமரர் வல்லிபுரம் மகேந்திரராஜா J.P

(இளைப்பாறிய பிரதம தபால் அதிபர்)
திதி-30.10.2020

நெஞ்சம் அழுகிறது - உங்கள்
நினைவுகளை நினைத்து.

மேதேஸ் லேன்,
மானிப்பாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

---

### இலவச ஆங்கில, கணினி வகுப்புகள்

**ONLINE COURES (INDIVIDUAL/GROUP)**
* ENGLISH COURSES
* ICT COURSES

* காலம்: மூன்று மாதங்கள்
* சான்றிதழ் வழங்கப்படும்.

ஆரம்பம்: சனி, ஞாயிறு
10.00 AM- 01.00 PM

**கற்கைப்பிரிவில்:**
* பாடசாலை மாணவர்கள்
* உ/த பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள்
* உத்தியோகத்தர்கள்

அரச, தனியார் இணைய முடியும்.

**பதிவு:**
**Type your Name , Course Name to**
**076 685 2529/077 602 1794**

# எந்த நாடும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியாது

## இந்தியத் தூதுவர் -சம்பந்தன் சந்திப்பு தொடர்பில் அரசு கருத்து

**கொழும்பு, ஓக். 30**

**இலங்கையில் தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்கள், முஸ்லிம்கள் என்று மூவின மக்களும் வாழ்கின்றார்கள். இந்த நிலையில், தமிழர் விவகாரம் தொடர்பில் எந்த நாடும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியாது. இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**



இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் இடையில் கொழும்பில் நேற்றுமுன்தினம் மாலை திடீரென முக்கிய சந்திப்பு நடைபெற்றது. இதன்போது தமிழர் தரப்பின் பல்வேறு விடயங்கள் குறித்து இருவரும் பேசினர். இது தொடர்பில் அரசின் பேச்சாளரான கெஹலிய ரம்புக்வெல கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் என்று மூவின மக்களும் சமவுரிமைகளுடன் ஒற்றுமையாக வாழ்கின்றார்கள். ஆனால், இந்த ஒற்றுமையைச் சிதறடிக்கும் வகையில் தமிழ் அரசியல்வாதிகள்தான் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றார்கள். அப்படியான தமிழ் அரசியல்வாதிகளுடன் தமிழர் விவகாரம் தொடர்பில் வெளிநாடுகளின் தூதுவர்கள் தன்னந்தனியே பேச்சு நடத்துவது ஏற்றுகொள்ளக்கூடியதல்ல.

குறித்த தமிழ் அரசியல்வாதிகளுடன் மட்டும் பேசிவிட்டு தமிழர் விவகாரம் தொடர்பில் எந்த நாடும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முடியாது.

இந்த நாட்டில் மூவின மக்கள் வாழ்கின்றார்கள் என்பதை தமிழர் விவகாரம் தொடர்பில் அக்கறை செலுத்தும் நாடுகள் கவனத்தில்கொள்ள வேண்டும், என்றார். (ஒ.22)

# இன்றைய நெருக்கடிகளுக்கு சீன சார்பு காரணமாகிவிட்டது

## ரணில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக். 30

"ராஜபக்சவின் ஆட்சியில் சீன சார்பு என்று இலங்கை அநாவசியமாக அடையாளப்படுத்தப்பட்டுவிட்டது. இதுவே இன்றைய நெருக்கடிகளுக்கும் காரணமாகியுள்ளது. எனவே அமெரிக்க இராஜாங்க செயலரின் பயணத்தை அரசு எளிதாக எடுத்துக்கொள்ளாது இராஜதந்திர ரீதியில் சிறப்பாக அணுக வேண்டும். குறிப்பாக எம்.சி.சி. ஒப்பந்தம் போன்ற விடயங்களில் அமெரிக்காவின் நிலைப்பாடு யார் ஆட்சிக்கு வந்தாலும் அங்கு மாறுபடாது" இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற கட்சி உறுப்பினர்களுடனான சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். "ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலங்களில் அனைத்து நாடுகளையும் முறையாக அணுகினோம். எந்தவொரு நாடும் இலங்கை குறித்து சந்தேகக் கண்ணுடன் நோக்கும் நிலையை உருவாக்கவில்லை" என்று அவர் தெரிவித்தார்.

"ஜப்பான் மற்றும் இந்தியா இலங்கையில் முன்னெடுத்த அபிவிருத்தித் திட்டங்களை சீனாவுக்கு வழங்கியமை குறித்து அமெரிக்கா அதிருப்தியானதும் சந்தேக நோக்குடனுமே உள்ளது. இதனை அரசு உணர்ந்துள்ளது. அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ இலங்கைப் பயணத்தின்போது சீனாவை விமர்சித்தது போன்று மனித உரிமைகள் குறித்தும் நினைவூட்டினார். எனவே எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் அது அந்த நாட்டின் தேசிய கொள்கைகளில் தாக்கத்தை ஏற்படுத்தாது" என்று அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

# வெளிவிவகார கொள்கை நடுநிலைமை தவறினால் மிகப்பெரிய பின்விளைவு

## அரசை எச்சரிக்கிறார் இரா.சம்பந்தன்

கொழும்பு, ஓக். 30

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான இலங்கை அரசு, அனைத்து நாடுகளுடனும் இணைந்து பயணிக்கக்கூடியவாறு புதிதாக பக்கச்சார்பில்லாமல் சமாந்தரமான கொள்கைகளை வகுத்துக் கருமங்களை முன்னெடுக்க வேண்டும். இந்தக் கடமையிலிருந்து தவறினால் மிகப் பெரிய பின்விளைவுகளை இலங்கை சந்திக்க வேண்டி வரும். இவ்வாறு எச்சரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன். உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்டு இலங்கை வந்திருந்த அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ, 'நிலையான வளர்ச்சியுடன் இலங்கை மக்களுக்கு இறையாண்மையும் சுதந்திரமும் இருக்க வேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது. ஒரு நட்பு நாடாக அமெரிக்கா அதைச் சரியாக வழங்குகின்றது என்று நாங்கள் நினைக்கின்றோம். ஆனால், சீனா ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கொண்டுள்ளது. இலங்கையைச் சீனா வேட்டையாடி வருகின்றது. அந்த நாடு நிலத்திலும் கடலிலும் இறையாண்மையை மீறி வருகின்றது' என்று கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இது தொடர்பில் இரா.சம்பந்தனிடம் நேற்றிரவு 'உதயன்' வினவியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது,

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பலவிதமான கருமங்கள் சம்பந்தமாக சமீப காலத்தில் ஏற்பட்ட தொடர்புகள் யாவரும் அறிந்ததே. கடல் பாதை மற்றும் உள்நாட்டுப் அபிவிருத்திப் பணிகளில் சீனாவின் பங்களிப்பு வேரூன்றிக் காணப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக இந்தியா, அமெரிக்கா உள்ளிட்ட ஏனைய நாடுகள் தெரிவிக்கும் கருத்துக்களை நாங்கள் மதிப்பீடு செய்ய வேண்டும். இதையெல்லாவற்றையும் உணர்ந்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சதலைமையிலான இலங்கை அரசு, அனைத்து நாடுகளுடனும் இணைந்து பயணிக்கக்கூடியவாறு புதிதாக பக்கச்சார்பில்லாமல் சமாந்தரமான கொள்கைகளை வகுத்துக் கருமங்களை முன்னெடுக்க வேண்டும். இது இலங்கை அரசின் பிரதான கடமை.

இந்தக் கடமையிலிருந்து தவறினால் மிகப் பெரிய பின்விளைவுகளை இலங்கை சந்திக்க வேண்டி வரும், என்றார். (ஒ.22)


**73ஆவது அகவை நாளில் இதயத்தால் இறைஞ்சுகின்றோம்**



**அமரர் திருமதி**
**சறோஜா ஈஸ்வரதாசன்**

அன்னை மடியில்
30.10.1947

ஆண்டவன் அடியில்
11.02.2018

எழுகதிராய் எமக்கெல்லாம் ஏற்றம் தந்த தெய்வத்தை
எழுபத்திமூன்று அகவைதனில் இதயத்தால்
இறைஞ்சுகின்றோம்.

180/2, சேர் பொன். இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

கணவர், மக்கள்,
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்



## மரண அறிவித்தல்



தோற்றம் 25.03.1975 மறைவு 29.10.2020

### ரூபராஜ் சுதர்சினி (சுதா)

தாவடியைப் பிறப்பிடமாகவும் லோட்டன் வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட ரூபராஜ் சுதர்சினி (சுதா) 29.10.2020 வியாழன் அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினம் புஸ்பரத்தினம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம், அருந்ததி தம்பதியரின் மருமகளும், ரூபராஜ் அவர்களின் அன்பு மனைவியும், டினுசன் (மானிப்பாய் இந்துக் கல்லூரி A/L 2022- கலைப் பிரிவு), டென்சியா (மானிப்பாய் மகளிர் கல்லூரி - தரம் 09 மாணவி) ஆகியோரின் அன்புத் தாயும், சாந்தினி (லண்டன்), செந்தில்குமரன் (கனடா), நந்தகுமார் (கனடா), சியாமினி (தாவடி), சதீஸ்குமார் (கனடா), தாரணி (தாவடி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், உலகநாதன் (லண்டன்), மைதிலி (கனடா), மங்கையற்கரசி (கனடா), வசந்தகுமார் (தாவடி), மதிவதனி (கனடா), செந்தில்நாதன் (தாவடி), புவிராஜ் (மானிப்பாய்), காமினி (ஜேர்மனி), ரவிராஜ் (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

லோட்டன் வீதி,
லைமன் லேன், மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 750 6291

## யாழ்ப்பாணத்தில்...

பேலியகொட மீன் சந்தைக்கு கூலர் வாகனச் சாரதிகளாகச் சென்று வந்தவர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து இந்தக் கிராமங்கள் முடக்கப்பட்டுள்ளன.

திருநகர் மற்றும் பாசையூர் மேற்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் முடக்கப்பட்டுள்ளன. கரவெட்டி இராஜகிராமம் நேற்று முதல் முடக்கப்பட்டுள்ளது.

முடக்கப்பட்ட கிராமங்களைச் சேர்ந்தவர்கள் அங்கிருந்து வெளிச்செல்லவோ அதேபோன்று வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் அங்கு செல்லவோ தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ஒ.ம,26)

## வடமராட்சியில்...

தொற்றாளர் தனிமைப்படுத்தப்பட்ட பின்னரும் பல இடங்களுக்குச் சென்றமையை சுகாதார அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர். வலி.வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பலாலி அன்ரனிபுரம் பகுதியில் கடந்த 23ஆம் திகதி இடம்பெற்ற அந்தியேட்டிக்கு பருத்தித்துறை கீரிமலை பேருந்தில் சென்றுள்ளார். இதனையடுத்து பேருந்தில் அவருடன் பயணம் செய்தவர்கள் மற்றும் அந்தியேட்டியில் கலந்துகொண்டவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரிலுள்ள தையல் கடைக்கும் அவர் சென்றுள்ளார். அந்தக் கடை மூடப்பட்டுள்ளது. பணியாளர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், சுப்பர்மடத்தில் அமைந்துள்ள கடலுணவு விற்பனை நிலையம் மற்றும் தும்பளையிலுள்ள இறால் விற்பனை நிலையம் என்பனவும் தொற்றாளர்கள் நடமாடிய இடங்களாக அடையாளப்படுத்தப்பட்டு அவை மூடப்பட்டுள்ளதுடன் அங்கு பணியாற்றியவர்களைத் தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கரவெட்டி இராஜகிராமத்தில் கண்டறியப்பட்ட தொற்றாளர், கிராமத்தில் பல வீடுகளுக்குச் சென்று வந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. இதனையடுத்து அந்தக் கிராமம் முடக்கப்பட்டுள்ளது. இதேவேளை, மூன்றாவது தொற்றாளர் சுப்பர்மடத்திலுள்ள கடலுணவு தொழிற்சாலையில் பணிபுரியும் வேறு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5,26)

## நேற்றும்...

திணைக்களம் தெரிவித்துள்ளது.

சமூகத்தில் இருந்து 467 பேருக்கும், தனிமைப்படுத்தல் நிலையங்களில் இருந்த 115 பேருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றுக் காரணமாக 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மருதங்கேணியில் அமைந்துள்ள கொரோனா சிகிச்சை மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் 13பேரின் மாதிரிகள் பெறப்பட்டன. அவர்களில் 6 பேருக்கு கொரோனா தொற்று தொடர்ந்தும் இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. (ஒ,5,22)

## வலிகாமம்...

கள் பூர்த்தியாகின்றன.

பலாலியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் யாழ்ப்பாணக் குடா நாட்டைக் கைப்பற்றும் நோக்குடன் சூரியகதிர் இராணுவ நடவடிக்கையை முன்னெடுத்தனர். இதனால், 1995ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி, ஒரே நாளில் ஓர் இரவில் வலிகாமத்தைச் சேர்ந்த 5 லட்சம் மக்கள், கைதடி - நாவற்குழி மற்றும் கோப்பாய் - கைதடி பாலங்கள் ஊடாக தென்மராட்சியைச் சென்றடைந்தனர். இந்த இடப்பெயர்வு இடம்பெற்று இன்றுடன் 25 ஆண்டுகள் நிறைவடைகின்றன.

இதேவேளை, 1990ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்த முஸ்லிம் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அறிவிப்புக்கு ஏற்ப வெளியேறிய 30 ஆண்டுகள் இன்றுடன் பூர்த்தியாகின்றன. (ஒ,5)

## மருத்துவரை...

அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இராணுவ அதிகாரி தகாத வார்த்தைகளைப் பிரயோகித்து மருத்துவமனையின் தலைமை அதிகாரியை நிந்தனை செய்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிகேடியர் கேகேஎஸ் பரகும் என்ற அதிகாரிக்கு எதிராகவே அரசமருத்துவ அதிகாரிகள் சங்கம் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது. இதன் காரணமாக மருத்துவமனையின் பணியாளர்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டு தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ள மருத்துவ அதிகாரிகள் சங்கம், மருத்துவமனையின் பணிகளில் இருந்து விலகியுள்ளதாகவும் அறிவித்துள்ளது.

கொரோனா மருத்துவமனைக்குரிய வசதிகள் வெலிஓயா சம்பத்நுவர மருத்துவமனையில் உள்ளதா என்பதை ஆராய்வதற்காக இரவு 10.30 மணியளவில் மருத்துவமனைக்கு இராணுவ அதிகாரி பிரவேசித்துள்ளார். இரவு நேரத்தில் அந்தப் பணிகளை முன்னெடுக்க முடியாது என்று மருத்துவர்கள் மறுத்ததையடுத்தே இராணுவ அதிகாரிக்கும், மருத்துவர்களுக்கும் இடையில் வார்த்தை மோதல் இடம்பெற்றது எனக் கூறப்படுகின்றது. (ஒ,5)

## பி.சி.ஆர்....

காலை 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் உள்ள பி.சி.ஆர். பரிசோதனை ஆய்வுகூடத்தை மீள இயக்குவது தொடர்பான கலந்தாய்வுக் கூட்டம் துணைவேந்தர் தலைமையில் இடம்பெறவுள்ளது. இதில் மருத்துவபீடாதிபதி, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை பணிப்பாளர் உள்ளிட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

வடக்கில் அதிகளவான மாதிரிகள் பெறப்படுகின்றபோதும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் மாத்திரம் சோதனைகள் மேற்கொள்ளப்படுவதால் முடிவுகள் வெளியிடப்படுவதில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தன. தாமதங்களைத் தவிர்க்கும் நோக்குடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் மீளவும் சோதனைகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளன. (ஒ,5)

## பூநகரியில்...

டுத்து சுமார் 800 மீற்றர் வரையில் கரையிலிருந்து கிராமங்களுக்கு உள்புகுந்துள்ளது. இதனால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கடற்றொழில் உபகரணங்களும் சேதமடைந்துள்ளது என பூநகரி பிரதேச செயலர் எஸ்.கிருஸ்ணேந்திரன் தெரிவித்துள்ளார்.

கடல் பெருக்கெடுத்து உள்புகுந்தமையால், கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் மரங்களுடன் மோதிச் சேதமடைந்துள்ளன. களங்கண்ணி வலைகளும் அழிவடைந்து கரையொதுங்கியுள்ளன. படகுகளின் இணைப்பு இயந்திரங்களும் சேதமடைந்துள்ளன. சுமார் 10 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் கடல் நீர் புகுந்ததால் கிணறுகள் உவராக மாறியுள்ளன. சுமார் இரண்டு மணி நேரத்தின் பின்னரே கடல் நீர் பின்நோக்கி கடலுக்குள் சென்றதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இரண்டுதினங்களுக்கு முன்னர் பூநகரி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கௌதாரி முனையிலும், யாழ்ப்பாணம் கல்லுண்டாயில் நேற்றுமுன்தினமும் இவ்வாறு கடல் பெருக்கெடுத்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ,6,ரி1)

## செய்தி சேகரிக்கச்...

கொழும்பு, ஒக். 30

இலங்கையின் பிரபல ஆங்கில வாராந்த பத்திரிகையொன்றின் நாடாளுமன்ற செய்தியாளர் ஒருவருக்கு கொவிட் 19 வைரஸ் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பத்திரிகை நிறுவனம் சுகாதார வழிமுறைகளுக்கமைய உடனடியாக ஊடகவியலாளரை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இதேவேளை மேற்படி செய்தியாளர், 20 ஆம் திருத்த சட்டம் நிறைவேற்றப்பட்ட தினத்தன்று செய்தி சேகரிப்பிற்காக நாடாளுமன்றத்துக்குச் சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவருக்கு இரண்டாவது சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. அதன்போதும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டால், அவருடன் அன்றைய தினம் செய்தி சேகரிப்பில் ஈடுபட்ட செய்தியாளர்கள் தனிமைப்படுத்தப்படுவர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ,இ)

## யாழ்.மாநகர....

உறுப்பினர் வி.மணிவண்ணன் சபை அமர்வில் இரண்டு ஆண்டுகளின் பின்னர் நேற்றுப் பங்கேற்றார். இருப்பினும் அவர் சபை அமர்வில் கலந்து கொண்டமை தொடர்பில் அவர் பிரதிநிதித்துவம் செய்த கட்சியினரே நேற்றுக் கேள்வி எழுப்பினர்.

யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினரான மணிவண்ணன் மீது மாநகர சபை எல்லைப் பரப்பரப்புக்குள் வதியும் ஒருவர் தொடர்ந்த வழக்கின் காரணமாக 2018ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மேன்முறையீட்டு நீதிமன்றம் சபை நடவடிக்கைகளில் அவர் பங்குகொள்ள இடைக்காலத் தடை பிறப்பித்திருந்தது. அந்த வழக்கை கடந்த ஒக்ரோபர் 13ஆம் திகதி வழக்காளர் மீளப்பெற்றமை காரணமாக அத்தடை உத்தரவும் செயலிழக்க மணிவண்ணன் மீண்டும் சபை நடவடிக்கையில் பங்குகொள்ளும் தகுதியைப் பெற்றிருந்தார்.

இதேநேரம் மேன்முறையீட்டு நீதிமன்றில் வழக்கு மீளப்பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றிய அறிவுறுத்தல் பிரதி யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உத்தியோகபூர்வமாக கிடைக்கவில்லை.

உத்தியோகபூர்வப் பதிவுப்பிரதியைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்படுவதாகக் குறிப்பிட்டு, குறித்த வழக்கு கைவாங்கப்பட்டு விட்டது என்று சட்டத்தரணி உறுதிப்படுத்திய கடிதத்தை மேயரிடம் சமர்ப்பித்து நேற்றைய சபை அமர்வில் மணிவண்ணன் பங்குகொண்டார்.

மணிவண்ணனுக்கு எதிரான வழக்கு முடிவுறுத்தப்பட்ட அறிவித்தல் நீதி மன்றில் இருந்து சபைக்கு உத்தியோகபூர்வமாகக் கிடைத்ததா என்ற வினாவை அவரது கட்சியைச் சேர்ந்த வை.கிருபாகரன் ஆட்சேபமாக எழுப்பினார்.

அதற்கு, எந்த அறிவித்தலும் இன்னும் கிடைக்கவில்லை என மாநகர சபையின் செயலர் பதிலளித்த சமயம், சட்டத்தரணியால் வழங்கப்பட்ட விளக்கக் கடிதத்தை மாநகர முதல்வர் இ.ஆனோல்ட் சபையில் வாசித்து அதை ஏற்பதாக அறிவித்தார்.

வி.மணிவண்ணனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியிலிருந்து நீக்கியுள்ளது. இதன் காரணமாக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி மாநகர சபை உறுப்புரிமையிலிருந்தும் மணிவண்ணனை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்தது. அது யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றின் இடைக்காலக் கட்டளை ஊடாக நிறுத்தப்பட்டுள்ளது. (ஒ,22)

## யாழில்...

தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என யாழ்ப்பாண மாவட்டச் செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சுமார் 350 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். பாசையூர், திருநகர் மற்றும் இராஜகிராமத்தைச் சேர்ந்தவர்களும் இதில் உள்ளடங்குகின்றனர். (ஒ,5)

## வீட்டிலிருந்து...

நடைமுறைப்படுத்துமாறு அரச நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜயசுந்தர விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய மேல் மாகாணத்தில் உள்ள அரச ஊழியர்களும் நாட்டின் ஏனைய பிரதான நகரங்களில் உள்ள அரச நிறுவனங்களில் பணியாற்றுபவர்களும் வீட்டிலிருந்து பணியாற்ற நடவடிக்கை மேற்கொள்ளும்படி அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஒ,22)

## கொழும்பை...

தில் நேற்று நள்ளிரவு 12 மணி முதல் ஊரடங்கு நடைமுறைக்கு வந்தது. இதன்காரணமாக நேற்றுக் காலையிலிருந்து கொழும்பிலிருந்து வெளியேற வெளிமாவட்டத்தைச் சேர்ந்த ஏராளமான மக்கள் முயற்சித்தனர். இதனால் கொட்டாவ அதிவேக நெடுஞ்சாலை நுழைவாயிலுக்கு அருகே அதிக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

மேல் மாகாணத்தை விட்டு மக்கள் எவரும் வெளியேற வேண்டாம் என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்.ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்ததையடுத்து வீதிகளில் நிறைந்திருந்த வாகனகளைப் பொலிஸார் திருப்பிவிட்டனர். குறிப்பிட்ட சிலரே கொழும்பிலிருந்து வெளியேற அனுமதிக்கப்பட்டனர். (ஒ,22)

## சடலம் கரையொதுங்கியது

கொழும்பு, ஒக். 30

முல்லைத்தீவைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் கடந்த வாரம் காணாமற்போயிருந்த நிலையில், இந்தியாவின் தமிழக மாநிலத்தின் ராமேஸ்வரம் துறைமுகம் அருகே ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் கரையொதுங்கியுள்ளது. அந்தச் சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை. (ஒ,இ)

# நீஸ் நகர கத்தோலிக்க தேவாலயத்தில் கத்திவெட்டுத் தாக்குதல்: மூவர் பலி!

பிரான்ஸில் தேவாலயம் ஒன்றில் இன்று காலை நடத்தப்பட்ட கத்திவெட்டுத் தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டிருக்கின்றனர். பலர் காயமடைந்துள்ளனர்.

நாட்டின் தெற்கு கடற்கரை நகரமான நீஸில் (Nice) அமைந்துள்ள நொத்தடாம் தேவாலயம் (NotreDame basilica) அருகிலேயே நபர் ஒருவரால் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.


பொதுமக்களைக் கண்டபடி கத்தியால் வெட்டிய நபர் பின்னர் பொலிஸார் நடத்திய தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் கைதுசெய்யப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டார் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்களது விவரங்கள் உடனடியாக வெளியாகவில்லை. எனினும் தேவாலயத்தின் காவலர் மற்றும் இரு பெண்கள் ஆகியோர் உயிரிழந்துள்ளனர் என்று முற்கொண்டு வெளியான செய்திகள் தெரிவித்தன.

கொல்லப்பட்ட பெண்களில் ஒருவரது தலை துண்டிக்கப்பட்டிருந்தது என்று ஒரு தகவல் தெரிவித்தது.

தாக்குதல் நடைபெற்ற நகரின் மத்திய பகுதியை பொலிஸார் சுற்றி வளைத்துள்ளனர். அம்புலன்ஸ் மற்றும் அவசர சேவைப் பிரிவினர் அங்கு விரைந்து காயமடைந்தவர்களை மீட்டுள்ளனர்.

அவசர நெருக்கடி காலப் பணியகம் ஒன்று அங்கு திறக்கப்பட்டிருக்கிறது. அதிபர் மக்ரோன், பிரதமர் ஆகியோர் சம்பவம் நடந்த நீஸ் நகருக்கு விரைகின்றனர் என்று பரிஸ் ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.



"சார்ளிஹெப்டோ" கேலிச் சித்திரங்கள் தொடர்புடைய தாக்குதல் சம்பவங்களை அடுத்து நாடு முழுவதும் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று முழு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று இத்தாக்குதல் இடம்பெற்றிருக்கிறது.

இது ஒரு பயங்கரவாதத் தாக்குதல் என்பது தெளிவாகத் தெரிவதால் விசேட பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் விசாரணைகளைத் தொடக்கி உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிசாசு போன்று மக்ரோன் சித்தரிப்பு

*ஈரான் பத்திரிகை அடாவடி*

தெஹ்றரோன், ஒக்.30

ஈரான் பத்திரிகையொன்று பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோனை பிசாசு என்று சித்தரித்து ஓவியம் ஒன்றைப் பிரசுரி த்துள்ளது. இது தற்போது சமூகவலைத்தள்ங்களில் பிரபலமாகி வருகிறது.

சார்லி ஹேப்டோ பத்திரிக்கையில் வெளிவந்த நபிகள் நாயகத்தின் கேலிச் சித்திரம் தொடர்பில் மாணவர்களுடன் கருத்துப் பகிர்ந்த ஆசிரியர் ஒருவர் அண்மையில் தலையுண்டித்து கொல்லப்பட்டார். இதையடுத்து கொலையைப் புரிந்த 18 வயது இளைஞனை பொலிஸார் சுட்டுக்கொன்றனர். ஆசிரியர் கொல்லப்பட்டமைக்கு பிரான்ஸ் ஜனாதிபதி கடும் கண்டனத்தை வெளியிட்டிருந்தார்.

இந் நிலையில் பிரான்ஸ்க்கு எதிராக இஸ்லாமிய நாடுகளில் விமர்சனங்கள் கிளம்பியுள்ளன. இந் நிலையில் ஈரான் பத்திரிகை ஒன்று தனது அட்டைப்படத்தில் இம்மானுவல் மக்ரோனை பிசாசு போன்று சித்தரித்து கடந்த ஒக்ரோபர் 27 ஆம் திகதி பிரசுரித்துள்ளது. (வ-இ)






## கொரோனா இரண்டாம் அலை

# முடக்க நிலையில் பிரான்ஸ், ஜேர்மன்

பேர்லின், ஒக்.30

கொரோனாவில் இரண்டாவது அலை வேகமெடுத்துள்ளதை அடுத்து பிரான்ஸ் மற்றும் ஜேர்மனில் மீண்டும் முடக்கநிலை அமுல்படுத்தப்படவுள்ளது.

அதன்படி இன்று தொடக்கம் 4 வாரங்களுக்கு முடக்க நிலை அமுலில் இருக்கும் என்று பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

மக்கள் அத்தியாவசிய தேவைக்காக அல்லது மருத்துவ காரணங்களுக்காக மாத்திரம் வீட்டை விட்டு வெளியில் செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவின் பல பகுதிகளை விட ஜேர்மன் குறைந்த தொற்று வீதத்தைக் கொண்டிருந்தாலும், அண்மைய வாரங்களில் வைரஸ் பரவி வரும் வேகம் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது.

அதனால் 16 மாநில தலைவர்களின் ஒப்புதலுடன் முடக்கல் விதிமுறைகளானது நவம்பர் 2 ஆம் திகதி அமுல்படுத்தப்படும் என்று ஜேர்மன் பிரதமர் சான்ஸ்லர் அங்கேலா அறிவித்துள்ளார். (வஇ)

## சிறையில் கலவரம் 8 கைதிகள் உயிரிழப்பு



காபூல், ஒக்.30

மேற்கு ஆப்கானிஸ்தானிலுள்ள சிறைச்சாலையொன்றில் வெடித்த கலவரத்தில் 8 கைதிகள் உட்பட 12பேர் கொல்லப்பட்டுள்ளனர் என அம்மாகாண அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் 4 சிறைக் காவலர்களும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹேரத் நகரில் 2000 கைதிகள் உள்ள சிறையொன்றில் நேற்று முந்தினம் இரவு இந்தக் கலவரம் வெடித்துள்ளது. (வ-இ)



## அசர்பைஜான் மீது தாக்குதல்; 25 பொதுமக்கள் உயிரிழப்பு

பக்கூ, ஒக்.30

அசர்பைஜான் மீது ஆர்மேனியா கடந்த இரு நாள்கள் நடாத்திய கொத்துக்குண்டுத் தாக்குதலில் குறைந்தது 25 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என அசர்பைஜான் தெரிவித்துள்ளது. நாகோர்னோகராபெக் பிராந்தியத்துக்கு அண்மையில் கிழக்கு அசர்பைஜானின் பர்டா நகரில் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய் இடம்பெற்ற தாக்குதலில் 4 பேரும், புதன்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் 21 பேரும் உயிரிழந்துள்ளனர். (வ-இ)



# வெற்றி முரசறைந்தது சென்னை சுப்பர் கிங்ஸ்

கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இறுதிப் பந்தில் வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

நடப்பு ஐ.பி.எல். தொடரில் தொடர் தோல்விகளால் துவண்டு, ஐ.பி.எல். வரலாற்றிலேயே முதல் தடவையாக, முதல் நான்கு இடங்களுக்குள் வராமல் தொடரிலிருந்து சென்னை சுப்பர் கிங்ஸ் அணி வெளியேறியுள்ளது. இருப்பினும் ரோயல்ஸ் சலஞ்சர்ஸுடன் இடம்பெற்ற கடைசி ஆட்டத்தில் 8 இலக்குகள் வித்தியாசத்தில் சென்னை வெற்றி பெற்றிருந்தது. அதே உத்வேகத்துடன் நேற்றுக் களமிறங்கிய சென்னை அணி கொல்கத்தாவை 6 இலக்குகள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டது.

துபாயில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் சென்னை அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று கொல்கத்தாவை துடுப்பெடுத்தாடப் பணித்தது. நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 172 ஓட்டங்களை அந்த அணி பெற்றுக் கொண்டது. மெதுவான ஆட்டத்தை ஆரம்பத்தில் அந்த அணி வெளிப்படுத்தியது. 15ஆவது பந்துப் பரிமாற்றத்தின் பின்னர் அதிரடியைக் காட்டியது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் நிதிஷ் ராணா 61 பந்துகளில் 87 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பின்வரிசையில் தினேஸ் கார்த்திக் 10 பந்துகளில் 21 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் நிகிடி 2 இலக்குகளைக் கைப்பற்றினார். 173 ஓட்டங்களுக்கு பதிலளித்து ஆடிய சென்னை அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. வொட்சன் 14 ஓட்டங்களுடன் ஏமாற்றினார். இரண்டாவது இலக்குக்கு இணைப்புச் சேர்ந்த ஹைக்வாட், அம்பதி ராயுடு இணை வெளுத்து வாங்கியது. 37 பந்துகளில் 68 ஓட்டங்களை இணைபாக பகிர்ந்த நிலையில் ராயுடு 20 பந்துகளில் 38 ஓட்டங்களுடன் வெளியேறினார். தொடர்ந்து நுழைந்த டோனி ஓர் ஓட்டத்துடன் நடையைக் கட்டினார். அதிரடி காட்டிய ஹைக்வாட் அரைச் சதம் கடந்தார். இறுதி நேரத்தில் 72 ஓட்டங்களுடன் (53 பந்துகளில்) ஆட்டமிழந்தார். சென்னை அணியின் வெற்றி கேள்விக்குறியானது.

கடைசி இரண்டு பந்துப் பரிமாற்றங்களில் 30 ஓட்டங்கள் வெற்றிக்கு தேவை என்ற நிலையில் ஜடேஜா வெளுத்து வாங்கி கடைசிப் பந்தில் வெற்றிக்குத் தேவையான ஓர் ஓட்டத்தை சிக்ஸர் அடித்துப் பெற்றார். ஜடேஜா ஆட்டமிழக்காமல் 11 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 2 பவுண்டரிகள் அடங்கலாக 31 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். ஆட்டநாயகனாக ஹைக்வாட் தெரிவானார். (ஒ.5)

**வீடு விற்பனைக்கு**

மானிப்பாயில் 2 1/2 பரப்புக் காணியுடன்
நல்ல நிலையில் உள்ள வீடு
விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்பு: **077 778 7545**

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் ராசபாத வீதியில் மெயின் றோட்டுடன் 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. பிரித்து கொடுக்கப்படும். 1 1/2 பரப்பாக.
தொடர்பு: குரு
**077 805 1655, 076 6400 974**

# முதலாம் ஆண்டு நினைவு

திருமதி
**மாறன் யோகமாதினி**
திதி: 30.10.2020





கலைத்தாலும் கலைவதில்லை
காலமெல்லாம் உன் நினைவுகள்
மீண்டும் மீண்டும்
வந்து அமர்கின்றன என் மனக்கூட்டில்

"அவளது தனிமையில் அந்தச் சூத்திரம்
பிறப்பவை அனைத்தும் இறக்கும் என்று"
என்னிடம் என்ன அவள் விரும்பினாளோ
அது அவளிடம் இருந்தது
"அன்பு " எனும் கவிதை
அவை மிஞ்சும் சொற்கள் அல்ல

எனது மனைவிக்குக் குற்றவுணர்வும்
வருத்தமும் நிச்சயம் இல்லை
அவள்!
ஆகாயம், கடல், பூமிக்கு நன்றிகள்
கூறுகிறாள்
அவளது இருப்பில் அவை
பங்கு கொண்டதற்காக

அழகான பியானோவில்
தவறான இசைக்குறிப்பை
வாசித்தது யார்?
அதன் வழியே எனது துயரத்தை
கடந்து போய்விடலாம் என்று.........
"கடவுள் எனக்கு தந்த முகவரி " நீ



என்றும் உன் தண்ணிளி நினைவில்
கணவர் - மாறன்

மலர்வு
23.07.1972

உதிர்வு
11.11.2019



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.